
www.tamilarangam.net

# தேனீ


THENEE

கார்த்திகை/மார்கழி 1991



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



S. Paul

வெளிச்சத்தில் வாழ்வதாலோ
அல்லது அப்படி
நினைத்துக் கொள்வதாலோ
இருட்டை வெறுக்கும்
எனது பாடலை
ரசிப்பதில்லை அவர்கள்.

எனது துயரக்கதைகளனைத்தும்
அவர்களின் நகைச்சுவைத்துணுக்குகளாவதையிட்டு
துணுக்குற்றது மனம்.

"இரவின் விளக்காய் சந்திரன்
பகலின் விளக்காய் சூரியன்"
என்று
பழக்கப்படுத்திக் கொண்டது வாழ்வு.

வீரமாகாளி நின் பார்வை படாமல்
இரண்டுமிருந்தும் இருட்டானது உலகம்.

காலவீதிகளில்
வாழ்வின் முதுகில் உண்மையின் சவாரி
சுமையே அல்ல என்பது
எவ்வளவு பெரிய உண்மை.

இருட்டுத் தேசத்தின்
இருள் அறையில்
எனது நிழலும்
இருளைஇனவிருத்தி செய்வதை
நான் நிறுத்த முடியவில்லை.

வீரமாகாளி
உனது ஒளியாய்
வந்து விழும்
சின்ன ஒளிவீச்சையும்
கால்களால் மிதிக்க நேருதலை
எண்ணி
அழுவதற்கு எனக்கு அமைதியில்லை.

அடைக்கப்பட்டே
பழகி விட்டதால்
கதவினைத் திறந்து விட்டாலும்
சிறகுகள் ஒடுக்கி
தூங்கிக் கிடக்கிறதென் குருவி.

www.tamilarangam.net

உனது சிரிப்பாய்
வெளியே வெளிச்சத்தின் விரிசல்
உயிர்களின் உணர்வுக் கட்டுகள் அவிழ்க்கையில்
அலட்சியமாய் தூங்கும்
மரங்களும் மனிதர்களும்.

காற்றின் அர்த்தமும்
உனதொளியின் பெருமையும்

அடைக்கப்பட்டஅறைகளிற்தான்
அதிகம் உணரப்படுகிறது.

நாளை,
என்னைச் சுற்றி சுவர்கள் எழுப்பி
இருட்டை எனக்களித்தவர்களே
அநியாய விலையில்
விளக்கு விற்பதற்காய்
என்னிடம் வரலாம்.

இருள்
இருளினைத் தொடர்ந்து வருவதும் இருள்
அதனைத் தொடர்வதும் இருள்.
எந்தப் பொழுதிற்கும்
இருளே இங்கு பொதுவான தென்றிருக்கையில்
விழித்திருக்கும் எனக்கு
உன் வெளிச்சத்தின் மீதான
என் ஒரு தலைக் காதல்
நியாயமற்றதா வீரமாகாளி?

ஒளி போன பின்னர்
இருட்டு வருகிறதா?
இருட்டுத்தான் நிரந்தரம்
ஒளி தற்காலிகமானதா?

இருளொடு பொய்க்கு என்ன உறவு?
வெளிச்சத்திற்கும் உண்மைக்கும் சம்பந்தமுண்டா?
என்பது பற்றி
எனக்குக் கேள்விகளில்லை; கவலையுமில்லை.

ஆனால்
இருளொடு இரவிற்கிருக்கும்
உறவு பற்றி
அறியும் நான்
இரவுகளொடு எப்போதும்
நெருங்கியிருக்கும்
கனவுகளிலும்
உனதொளி தன்னையே
தவிர்க்க முடியாமல்
அடிக்கடி காண்கிறேன்.

இங்கு எப்பொழுதும்
இருட்டு என்பதை
உனக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

இருட்டைப்பார்க்க விரும்பாமல்
கண்களை மூடினாலும்
இருளே வருகிறது.

நீ எனக்கு என்றுமே கனவான
வெளிச்சம்.
மூளையற்ற இருட்டு
தன்னைக் காணுமிடமெல்லாம் பரப்பிவைப்பினும்
எனது
பாடலின் கருவிலும்
கனவின் பொருளிலும்
வெளிச்சத்தின் சிரிப்பு;
வீரமாகாளி உனது சிரிப்பு.

விதுரன்

www.tamilarangam.net

# ரீங்காரம்

"இலங்கை இராணுவம் முன்னேறிக் கொண்டிருக்கிறதாம்."
"யாழ்ப்பாணத்தைச் சுற்றிவளைத்த இராணுவம், மேற்கொண்டு நகராமல் அப்படியே நிற்குதாம்."
"இடைக்கிடையில் ஹெலிதாக்குதல்களும், ஷெல்தாக்குதல்களும் பரவலாக நடக்குதாம். அப்பாவிச்சனங்கள் தான் சாகுதுகள்."
"இந்தமுறை உண்மையாகத்தான் புலிகளை அழிக்கிறாங்கள் போல."
"இவையளாலை கடைசிவரைக்கும் புலிகளை அழிக்கமுடியாது."
"புலிகளாலை இந்தமுறை வெல்லமுடியாது. சின்னபிள்ளைகளை வைத்துக்கொண்டு எப்படிச் சமாளிக்கமுடியும்? ஆணையிறவிலை நடந்தது தெரியுந்தானே."
"பிரேமதாஸவுக்கு புலிகளை அழிக்க விருப்பமில்லாவிட்டாலும் ஆமிக்காரர்களுக்கு அழிக்கத்தான் விருப்பம்."
"ஜே.வி.பியை அழிக்கிறதுக்கு அவங்களுக்கெதிரான இராணுவத்தின் பழிவாங்கும் வெறியும் ஒரு காரணம். இங்கே அப்படியில்லை. இராணுவம் அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டே இயங்கும்."
"இவ்வளவுநாளும் சனங்கள் அழிஞ்சு கொண்டிருக்கையில் புலிகள் சமாதானம் வேண்டும், பேச்சுவார்த்தைகளுக்குத் தயார் என்றெல்லாம் சொல்லவில்லை. இப்ப தாங்கள் பலவீனப்பட்ட பிறகு, தொண்டமானை அனுப்பு கதைக்கப்போறம் என்றுகினம். பிரேமதாஸவும் புலிகளின்ரை தலமைக்கு தீங்கு விளைவிக்க (கவனிக்கவும்: சாதாரண புலிகளை அல்ல) விரும்பமாட்டான். அவனும் புலிகளும் கட்டாயம் ஒரு இணக்கத்திற்கு வருவினம். இதாலை சனத்தின்ரை அழிவு நிற்காது."

மேலே உள்ளவை கடந்த சில மாதங்களாக இலங்கை நிலைவரங்களைப் பற்றிய பலவிதமான அபிப்பிராயங்களினதும் கருத்துக்கள், ஊகங்களினதும் உள்ளடக்கங்கள் ஆகும். இவற்றில் கடைசியாக இடம்பெற்றிருக்கும் அபிப்பிராயம் யாருக்கும் ஏற்பட்டிருக்குமாயின் அவர்களுடன் நாமும் இணைந்துகொள்கிறோம்.
பிரேமதாஸவிற்கெதிரான குற்றச்சாட்டுப்பிரேரணையை பாராளுமன்ற எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த போது, எங்கே அவரது ஆட்சி ஆட்டங்கண்டுவிடுமோ என்று அவசரவவசரமாக 6 புலிகளின் பிரதிநிதிகளை ஈரோஸ் என்ற பெயரில் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்ததானது, முன்பு இந்தியபடைகள் நிலைகொண்டிருந்த சமயம், தங்களுக்கு பெருந்தொகையான ஆயுதங்களை அனுப்பி வைத்ததற்காகவும் (புலிகளின் இந்திய இராணுவ எதிர்ப்பை முக்கிய காரணமாகக் கருதி , தேசிய சக்திகளாக அங்கிகரிப்பவர்கள், அதேநிலைப்பாட்டில் உறுதியாக நின்ற பிரேமதாஸவையும் உணர்ச்சிவசப்பட்டு அங்கிகரித்தாலும் ஆச்சரியமில்லை. இங்கே விட்டுக்கொடுக்காத தன்மைதானே முக்கியம்?.) அந்தக் காலக்கட்டத்தில் புலிகளினால் நிகழ்த்தப்பட்ட(பகல்) கொலைகளுக்கு வக்காலத்து வாங்கியதற்குமான நன்றிக்கடனா அல்லது அதேகாலத்தில் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது ஏற்பட்ட இணக்கங்களின் விளைவுகளின் ஒன்றாகத் தான்

www.tamilarangam.net

இதுவும் இருக்கவேண்டும் என்றுதான் கருதலாம். அந்தக்காலத்தில் அரசு செய்த உதவிகள் (வக்காலத்துக்கள் உட்பட) புலிகளின் இன்றுவரையிலான இருப்பின் தொடர்ச்சிக்கு காரணம் என்பது புலிகளின் தலமைக்கும் பிரேமதாஸவிற்கும் தெரியாத விடயமல்ல.

ஆனால் ஒன்று மட்டும் தெளிவு. இந்த இரு கும்பல்களினதும் பரஸ்பரம் நன்றிவிசுவாசம் காட்டிக்கொள்ளும் நிகழ்ச்சிகளால் மிதிக்கப்பட்டுக் கொண்டிருப்பது அப்பாவி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களும் சுயநிர்ணயஉரிமை கோரிக்கையும் தான். இன்னும் எத்தனை யுத்தங்கள், யுத்தநிறுத்தங்கள், பேச்சுவார்தைகள், பலியெடுப்புக்கள், நியாயப்படுத்தல்கள் இருபகுதியினரதும் இந்த நன்றி விசுவாசத்திற்காக நிகழ்த்தப்படுமோ தெரியாது.


தமிழ்த்தேசியவாதமும், சிங்களப் பேரினவாதமும் தீவிரமாக அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருப்பது வடகிழக்கு யுத்தங்களின் போது சாதாரண தமிழ் பேசும் மக்கள் மீதும். காத்தான் குடியிலும், கொக்கட்டிச்சோலையிலும், சிங்களஎல்லைப்புற கிராமங்களிலுமேயொளிய புலிகளின் தலமைக்கும் அரசிற்குமிடையிலான சமரசங்கள், விட்டுக்கொடுப்புக்கள் ஆகியவற்றிற்கு குறுக்கே இவை வருவதில்லை என்பது தான் உண்மை.

சிங்கள பேரினவாதம் என்ற புகைமண்டலத்தில் மறைந்துகொண்டு இன்று முழு இலங்கையினதும் சாதாரண மக்களின் மேல் தனது ஆட்சியை படரவிட்டிருக்கும் பிரேமதாஸ அரசினது ஆட்சியில் தனியார்மயப்படுத்தல்களினால் பொருளாதரத்தைச் சீரழிப்பதோடு, உழைக்கும் மக்களின் வாழ்க்கைத்தரம் சிதைக்கப்படுவதற்குமான வகையில் சர்தேச நாணய நிதியத்தினதும், உலகவங்கியினதும் உத்தரவுகளின் கீழ் மக்கள் சுரண்டப்படுகிறார்கள். இவற்றைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த தன்னை இறுக்கமாக நிலைநிறுத்திக் கொள்வதற்காக தனக்கெதிரான சக்திகளை அழித்தொழித்துவரும் அரசினை எதிர்ப்பதற்கான வெகுஜனப் போராட்டங்களை மையமாகவைத்து உருவாக்கப்படும் அரசியற் போக்கே தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கான போராட்டத்திற்கு சரியான திசைவழியைக் காட்டும்.

தமது நலன்களின் அடிப்படையில் புலிகளின் அரசிற்கு முண்டுகொடுக்கும் அணுகுமுறைகளும், அரசிற்கெதிரான அனைத்துச் சக்திகளுக்குமெதிராகவும் நடைமுறையிலிருக்கும் அவசரக்காலச்சட்டத்தை நீடிப்பதற்கு ஆதரவு செரிவித்திருக்கும் ஈரோஸ். ஈ.என்.டி.எல்.எப், தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் கா ங்கிரஸ் போன்ற குழுக்களின் துரோக அரசியலும் முழு இலங்கைமக்களினது பொதுஎதிரியான அரசுக்கெதிரான மக்கள் சார்ந்த முன்னெடுப்புக்களுக்கு எதிராகவே இயங்கப் போகின்றன என்று தம்மை இனங்காட்டியுள்ளன.

சிங்கள பேரினவாதம், தமிழ்த்தேசியவாதம் போன்ற மாயைகளும் களையப்படும்போதே மக்கள் தமது எதிரிகளை சுலபமாக இனங்காணமுடியும். முன்குறிப்பிட்ட மக்கள் சார்ந்த அரசியற்போக்கு பலப்படுத்தப்படும் பொழுதுதான் இவை கலையப்படும் என்பது ஏற்றுக்கொள்ளவேண்டிய உண்மையாகும்.

www.tamilarangam.net



சிவரமணியின் கவிதைகளைத்தான் தெரியும். அவரின் மரணத்திற்குப் பின்தான் முகத்தையே பார்க்கமுடிந்தது ஒரு புகைப்படத்தில்.
அவரது கவிதைவரிகள் ஒவ்வொன்றும் ஏற்படுத்தும் தாக்கத்தைப் போலவே அவர் இப்பொழுது இல்லை என்ற செய்தியும் இனந்தெரியாத தாக்கத்தை உருவாக்கின.
வார்த்தைகளுக்கு இவ்வளவு பலமா?
சிவரமணியின் கவிதை வரிகளுக்கிடையில் மனம் பயணம் செல்லும்பொழுது புரிந்து கொள்ளமுடிவது அவர் வாழ்வின் வலிமையை உணர்ந்திருந்தார் என்பதைத்தான்.
அவரது வாழ்வு மீதான வேட்கை, மனிதநேயத்தின் மீதான அவரின் நேசத்திலிருந்து இம்மியளவுகூட விலகியிருக்கவில்லை. அதனால்தான் அவரது வரிகள் பலமானவையாக இருக்கின்றன போலும்.
மானிடநேசிப்பிலிருந்து விடுபட்ட வாழ்வை அது எத்தனை அழகாக இருந்தபோதிலும் அவரது கவிதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதுதான் இந்த சமூகத்தின் தொப்புள்கொடிக்குத் துப்பாக்கி நீட்டப்படும்பொழுது ஒரு மெல்லிய பூவின் நுனியில் அமர்ந்திருக்கும் வண்ணத்துப்பூச்சியின் கனவு அவருக்கு அர்த்தமற்ற சம்பவிப்பாகத் தெரிந்தது.
மனச்சாட்சியைத் துணைக்கழைத்து எமது சமூகத்தின் யதார்த்தத்தைப் பார்த்தால் இவரது கவிதைவரிகளின் மெய்த்தன்மை புரியும்.
வாழ்வு வலிமையானது என்பது உண்மை. அதனால்தான் உண்மைக்கவியான சிவரமணியால் எழுதமுடிந்தது.
மரணம் அநியாயமானது. அது அவரை வாழ்விலிருந்து பிரித்துவிட்டது.
ஆனால்.....
மனிதநேசத்தின் மனச்சாட்சி தனக்குள் எதையோ கேட்கி றது.
"விரக்தியின் நிழல் விழும்
திசையற்ற இருள்தேசத்துக் கவிஞையின் வாழ்வு
அவளுடையது மாத்திரந்தானா?"

## இருட்டு
## அவசர அவசரமாக
## ஆடைகளைக் கழற்றிவிட்டு
## நிர்வாணமாகிக்கொண்டிருக்கிறது.

*கலைகளிலாயினும்*
*உயிர்த்தெழுகிற விருப்புக்களுடன்*
*என்னுள் நுழைந்து*
*என்னைத்தேடி வெளிக்கொணர்ந்து*
*இடைவெளியின்றிக்*
*காலத்துக்குப் பின்னால்*
*ஓட முற்படுகிறேன்*
*நானே காலமாகிவிடத்*
*துடிக்கிற முனைப்புடன்*

*முளைத்தலில் இருந்தே*
*தாழ்ந்த குரலிலான கட்டளைகளைத்*
*தூண்டுதல் என நினைத்துச்*
*சுயத்தினை இழந்து போனே*

*பிரபஞ்சம் பெருவெளியில்*
*ஒரு சிறு அணுத்துண்டாய்*
*என் முகத்தையும் தொலைத்துவிட்டு*
*இருந்தேன் சப்பாணியாய்.*

*தவறிவிட்ட கணங்களின்*
*புரியாமை மூடுதலில்*
*முளைத்துவந்த சிறகுகளும்*
*மறந்தே போயிற்று.*

www.tamilarangam.net

நடத்தல் எனக்கு இயலாததல்ல
மூன்றாவதாய் எனக்கொரு
பாதம் தேவையில்லை
கைத்தடியைத் தூரே எறிந்துவிட்டு
எழுந்து நடக்கத்தொடங்கியிருக்கிறேன்.
சொர்கமோ தேவதைகளோ
எனக்கு வேண்டாம்.
முட்டியோ மோதியோ
தலைகீழாய் நின்றபடியோ
என் தரிசிப்புக்குச் சுதந்திரம் இருப்பின்
அதுவே போதும்.

காலத்தின் பின் தொடர்தல்
என்னையும் நிர்வாணமாக்கும்
என்கிற நம்பிக்கைக் கீற்றில்
கணங்களைக் கொழுத்தி
என்னைப் பட்டைதீட்டிக் கொள்கிறேன்.

மூச்சறுத்த மரணத்தின் சுவடுகள்
என் பாதங்களுக்கிடையில்
மூச்சையுற
என் வெளிச்ச நோக்குகை
இன்மையை விரட்டுகிறது.

ஒரு கடிகாரத்தின் முட்களாய்
ஒரு வசந்தக்காலக் குயிலாய்
வெயிற் காலத்தில் புழுங்கி வியர்க்கிற
ஒரு மனித மேனியாய்
இருந்துகொள்ள நினைக்கிறேன்.

முற்றுப்புள்ளிகள்
முணுமுணுக்கிறது என்பதற்காகத்
தகர்ந்து போகாமல் இருப்பதில்லை
நிரந்தரங்கள்.

கழுத்தை நெரித்தாயினும் கொன்றுவிட்டுத்
தூரக் கொண்டுபோய்ப்
புதைத்துக் கொண்டிருக்கிறேன்
நிரந்தரங்களை
வாடைத் தவிர்ப்புக்காய்
அத்திசைக்காற்றுக்கு
ஜன்னலைச் சுத்தியுள்ளேன்.

நான் கொழுத்துகிற
மெழுகுவர்த்திகள் அணைக்கப்பட்டாலும்
ஒவ்வொரு விடியலிலும்
தரிசனம் தருகிற ஒரு சூரியன்
என னுள்ளும் ஒரு சூரியனான
இருத்திலிட்டுப் போகிறது.

தேடலின் வியாப்பில்
உள்ளவைகள் சிறியனவாக
புதிய தரிசனங்களில்
என் பழைய முகங்கள்
உதிர்ந்து போகின்றன.

புலன்கள் இசைக்கிற
தொலைவுகளுக்கப்பால்
என் மனக்குதிரை
மிக அவதானமாக
புதியன தேடலில்
மிக மூர்க்கத்தனமாக
சவாரி செய்து கொண்டிருக்கிறது.

திசைகள் தறிபட்டு
எல்லைகள் நழுகிப்போய்த்
தொலைவு நீளுகிறபோது
நான் பரிநிர்வாணமாய்
நடந்து கொண்டிருப்பேன்
அணைத்திலும்

இருட்டு
அவசர அவசரமாக
ஆடைகளைக் கழற்றிவிட்டு
நிர்வாணமாகிக்கொண்டிருக்கிறது.

சிவரமணி

நன்றி: ஓசை

www.tamilarangam.net

# தலைக்கு மேல் ஒரு கூரை

1987-1989க்குமிடைப்பட்ட காலத்தில் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய இலங்கை அகதிகள் இரண்டாம் முறையும் இடம்பெயர்க்கப்பட்டுள்ளார்கள். UNHCR இவர்களுக்கு நிவாரணம் அளித்து வருகிறது. ஆனால் நிச்சயமற்ற பாதுகாப்புநிலமைகளும், தங்குமிடம் தொடர்பான கடினமான வசதிகளும் இதனை சிக்கலான இலக்காகின்றன.

அப்பாடா ஒருமாதிரி எங்களுக்கு ஒரு இடம் கிடைத்துள்ளது, என்கிறார் யோகேஸ்வரி. 38 வயதான விதவை, 3 பிள்ளைகளுக்குத் தாய். மடுவிலுள்ள தற்காலிக வசிப்பிடத்தில் ஒரு அறை கிடைத்தபோதே இவ்வாறு கூறினார். 1983இல் வடக்கு, கிழக்கு இலங்கையில் ஏற்பட்ட பிரச்சனையில் தென்னிந்தியாவிற்குத் தப்பிசென்றார். 5 வருடங்களின் பின் நிலைமைகள் சீர்திருந்திய பின்னர் தாய்நாட்டுக்குத் திரும்பிய வந்து தலைமன்னாரிலுள்ள வரவேற்பு மையத்தில் வசித்தார்.

எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் போல் தோன்றியது. UNHCR, யோகேஸ்வரிக்கு பணஉதவியுடன் சிறிது வீட்டுச்சாமான்கள். அத்துடன் சொந்தக் கிராமமான முருங்கனுக்கு திரும்புவதற்கும் உதவியது. அங்கு அவருக்கு வேறும் ஒரு நன்கொடை கிடைத்தது. 6மாத ரேஷன்பொருட்கள் அரசாலும், அரை ஏக்கர் நிலம், வீடு கட்டுவதற்கான உதவியுடன் உள்நாட்டுலுவகத்தினால் வழங்கப்பட்டது. அதே நேரம் அக்கிராமம் UNHCR இன் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ், உள்நாட்டுச்சேவைகளை முன்னேற்றவும், வருமானம் பெறும் வழிகளில் ஊக்குவிப்பு, பயிற்சி என்பவற்றிற்கான சந்தர்ப்பங்களையும் பெற்றது.

யூன் 1990இல் இந்தக்கனவு பொய்த்துவிட்டது. இலங்கைப்பிரச்சனை மீண்டும் வெடித்தது. புணருத்தாரண வேலைகள் நிறுத்தப்பட்டு பின்னோக்கிச் சென்றது. நிலமைகள் மேலும் மோசமாகி மக்களில் பலர் தமது உடமைகளை, வீடு, வாசல்களைக் கைவிட்டுச் சென்றனர். யூலை நடுப்பகுதியில் முருங்கன் கிராமம் முழுதும் ஏனைய கிராமங்களைப் போல் பாலைவனமாகியது. பலர் இலங்கையின் வேறு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றபோது, சிலர்கடல் கடந்து இந்தியா போயினர். கடந்த 6 மாதங்களில் 17500 பேர் மன்னார் மாவட்டத்திலுள்ள மடுவில் அகதிகளாக வந்துள்ளார்கள்.

## தேவிகா

ஆபத்தான நிலையிலுள்ள மக்களுக்கு மடு புகலிடம் கொடுப்பது ஒன்றும் இது முதல் தடவை அல்ல. 17ம் நூற்றாண்டிலேயே, ஒல்லாந்தினரின்(டச்சு அரசின்) வதைக்குப் பயந்து தப்பி ஓடிய கத்தோலிக்கருக்குப் புகலிடமாக விளங்கியது. அதி வணக்கத்துக்குரிய சொரூபம் ஒன்று தாபிக்கப்பட்டு 1983 இல் இலங்கையில் பிரச்சனை தொடங்கும் வரை பெருந்தொகையான யாத்திரிகர்களால் வரப்பெற்றது. இதன் பயனாக, மடு ஆலயம் [illegible]னான வசதிகளையுள்ளடக்கிய பிரதேசமானது. தங்குமிடம், நல்ல குடிநீர்வசதி குளிக்க, மலசலகூட வசதிகளையுள்ளடக்கிய வசதிகள் செய்யப்பட்டன.

## வருதலும்,போதலும்

கடந்த செப்டெம்பரில் UNHCR புனர்வாழ்வுத்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தது. பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து மீண்டும் தாயகம் திரும்பிய இடமான மன்னாரில் இருண்டு புனர்வாழ்வுநிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. முதலாவது பிரதானநிலையம் மடுவிலும்,

www.tamilarangam.net



மற்றையது பேசாலையிலும். இங்கு வசிக்கும் மக்கள் தமது விருப்பப்படி சுதந்திரமாக வந்து போகலாம். UNHCR இன் சேவையினாலும், அதன் உத்தியோகஸ்தவர்களின் தொடர்ச்சியான சமூகத்தினாலும் பயன் அடைந்தனர். 6 உபநிலையங்கள், 4 பிரதானநிலையங்களிலும், 2 தீவுகளிலும் நிறுவபபட்டன. சொந்த வீடுகளில் வசிக்கும் மக்கள், தேவைகளின் நிமித்தம் இடம்பெயர்ந்தோரின் வரிசையில் சேராமல் இருப்பதற்கே இது.

சாதாரண நாட்களில் மடுவிலுள்ள வசதிகள் ஒரு தடவையில் 3000 யாத்திரிகர்களின் பாவனைக்கு உகந்தது. ஆனால் இப்போது அதைவிட இருமடங்கு இடம் பெயர்ந்தோரின் பாவனைக்குத் தேவையாகவுள்ளது. சிலரது துணிகளிலான கூடாரத்தில் தங்க, ஏனையோர் படங்குகளாலான கூடாரங்களில் தங்கியுள்ளனர். பருவப்பெயர்ச்சிக்காலத்தில் எதிர்நோக்கும் மிகப்பெரிய சவால் 17500 இடம்பெயர்ந்த மக்களால் பாவிக்கப்படும் 15 தற்காலிகக் கூடாரங்களுக்குப் பதிலாக "தலைக்கு ஒரு கூரை" என்பதே.

கிடுகுகளான கூரைவீடுகள் என்பது இலகுவானதல்ல. பின்னப்பட்ட தென்னை, பனையோலைகளும் பெறுதல் இலகுவானதல்ல. அத்துடன் பயிற்சி பெற்ற வேலையாட்களால் மட்டுமே இது பின்னமுடியும். இலகுவான மலிவான கூரை வேயும் பொருளான கிடுகு தற்போது கிராக்கியாகவுள்ளது. இதனை இங்குள்ள உள்ளூர் ஆலயங்கள், நாட்டின் ஏனைய கிடுகு தயாரிக்கும் பிரதேசங்களில் இருந்து UNHCR இனால் நன்கொடையாக வழங்கப்பட்ட டிரக்குகள், டிராக்டர்கள் மூலம் கொண்டுவருகின்றன. இப்பிரதேசத்தில் நாடுதிரும்பிய, இடம்பெயர்ந்த மக்களுக்கான வசிப்பிட வசதி மட்டும்தான் தேவையென்றில்லை. பலருக்கு உடுபுடவை, துணிமணி வசதியில்லை. உணவு சமைக்கப் பாத்திரங்களில்லை. போதிய உணவு, குடிநீர், மருத்துவ கவனம் சுகாதார வசதிகள் போன்றவையும் இல்லை. UNHCR உம் ஏனைய நிறுவனங்களும் தேவையான உணவுப்பொருட்களையும், வீட்டுப்பாவனைப் பொருட்களையும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து தருவிக்க முயல்கின்றன. ஆனால் மடுவை வந்தடைவதற்குள் பொருட்கள் ஏற்றப்பட்ட டிரக்குகள் வழிநெடுக வெள்ளமான காட்டுப் பாதைகளாலும், பாதுகாப்பற்ற பாதைகளாலும் வரவேண்டியுள்ளது.

இப்புனர்வாழ்வுத்திட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்துள்ள மக்களுடைய தொகையுடன் ஒப்பிடும்போது, நிவர்த்தி செய்ய மிகவும் சிறியதே. ஆனால் கஷ்டப்படுகிற, தேவையுள்ள யோகேஸ்வரி போன்ற மக்களுக்கு இந்த உதவியுமின்றி வாழ்வது கஷ்டமே. இவர்களுக்காக UNHCR தொடர்ச்சியான நிவாரண உதவிகளை அதன் உத்தியோகத்தவர்கள் மூலம் வழங்கி வருகிறது.

ஆதாரம்:**REFUGEE.**

**Jan,Feb. 1991.**

www.tamilarangam.net

# பெண்கள் பற்றி ஒரு நோக்கு

பெண்களைப் பற்றி இன்று பெரிதாகவே அலட்டிக் கொள்கிறார்கள். ஏன் இன்று பெண்ணானவள் யாவரதும் கவனத்தை கவர்ந்து நிற்கிறாள்? அதற்கான காரணங்கள் என்னவென்பது இற்றைவரை புலப்பட்டதா? புலப்பட்டவர்கள் என்ன செய்தார்கள்? புலம்பினர், பக்கம் பக்கமாக எழுதினார்கள் என்ன நடந்தது? எதாவது முன்னேற்றம் இன்றைய பெண்கள் வாழ்வில் ஏற்பட்டதா? பெண்களை அடக்கியாண்ட ஆண்வர்க்கமே அடக்குமுறையை முதலில் எதிர்த்து நின்றார்கள். அவர்கள் பாரதி, பாரதிதாசன் வரிசையில் பெண்விடுதலை பற்றி அவா கொண்டு பாடினார்கள். இற்றைக்கு எத்தனையோ வருடங்களின் முன்பாரதிக்கு நூற்றாண்டே கொண்டாடினோம். இத்தனை வருடங்களில் பெண்ணினத்திற்கு விடுதலை எந்தளவில் கிடைத்தது? எல்லாமே நிகழாத நிஜங்களாகின. இதற்கெல்லாம் என்ன காரணம்? யார்காரணம்? இதற்கெல்லாம் முதற் காரணம் பெண்களே என்றால் அதை யாருமே மறுக்கமுடியாத உண்மை ஆகும். பெண்கள் நினைத்திருந்தால் எப்பவோ இந்த அடிமை தளைகளை களைந்தெறிந்திருக்கலாம். ஏன் இன்னும் எம்மால் இவற்றை உடைக்கமுடியாதிருக்கின்றது? எமது சமுதாய அமைப்பு பெண்களுக்கு இன்னும் தளைகளை களைந்தெரியுமளவிற்கு சுதந்திரத்தை அளிக்க மறுக்கினறது. ஏன் மறுக்கிறது? இன்னும் பெண்கள் தனித்து இயங்க முடியாத நிலையா? தன்னை தான் பாதுகாக்க முடியாத நிலையா? அப்படியாயின் இதற்கு யார்காரணம்? எமது சமுதாய அமைப்பு தான் என்பது புலனாகிறது.

பாரதி கவிபாடிய காலத்திலிருந்து இன்றுவரை பெண்ணினம் எதில் முன்னேறியுள்ளது என்று ஆராய்ந்தால், குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கல்வியிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது எனலாம். அன்று வீட்டு முற்றத்திற்கு வராத பெண்கள் இன்று வீதிவரை வந்து, நாடு விட்டு நாடு பாயவும் துணிந்துவிட்டார்கள். எதற்காக என்றால் அவர்களது அறிவுப் பசிக்கு உணவு தேடித்தான். ஐந்தாம், ஆறாம் வகுப்புகளுடன்படிப்பிற்கு மட்டம் போட்டவர்கள், இன்று பல்கலைக்கழகம் சென்று பட்டத்தின் மேற் பட்டங்கள் பெறுகின்றார்கள். தங்கள் படிப்பிற்கு ஏற்றவாறு வேலையும் பெறுகின்றார்கள். இன்று பெண்களால் செய்யமுடியாத தொழில் எது? பெண்கள் இல்லாத காரியாலயங்கள் தான் ஏது? ஆண்கள் நிர்வகிக்கும் பல துறைகள் இன்று பெண்கள் வசம் வீழ்ந்துள்ளது. அவர்களும் அதை நன்றாகவே அலங்கரித்து மேலும் புகழை தமதாக்குகின்றனர். இவ்வாறு பெண்கள் வசம் விழ காரணம் ஆண்களின் சீதன அம்பேயாகும்.

## சுரேகா

அவர்கள் தமது அம்புகளைப் பல இலட்சங்களை நோக்கி எய்வதால், பெண்கள் அக்கணைகளை சமாளிக்கும் முகமாக தங்களை தாங்களே தயார்படுத்தும் முன்னெச்சரிக்கையே இவர்கள் பல்வேறு தொழிலிலும் ஈடுபட வைத்துள்ளது எனலாம்.

இவ்வாறு சுயமாக சம்பாதிக்க தெரிந்த பெணகளில் எத்தனை பேருக்கு பெண்களைப் பற்றி, பெண்கள் படும் கொடுமைகள் பற்றி சிந்திக்க முடிகிறது? அதற்கெல்லாம் எங்கு நேரம். பெண் உழைக்க தொடங்கியதும் அல்லது படிப்பை நிறுத்தியதும், பெற்றோர் பாரமாக நினைத்து கல்யாணம் பேசுகின்றார்கள். பல இலட்சங்கள் கொடுத்து ஒரு மணாளனை வாங்கி, அவரது கட்டளைகளை சிரமேற்கொண்டு வாய்மூடி மௌனியாக வாழ்கின்றார்களே. ஏன் இப்படி எடுப்பார் கை பிள்ளையாக சுய சிந்தனையற்று வாழவேண்டும்?

புதிதாக திருமணம் செய்து

www.tamilarangam.net

வாழப்போபவர்கள் ஆணும் பெண்ணும் தானே. அப்படியிருக்க பெண்களிடம் சீதனத்தை எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயமானது? பெண்ணையும் பெற்றோர் படிப்பித்தார்கள் தான். அப்படியிருக்கும் போது ஏன் பெண்கள் காசு கொடுத்து அவர்களை வாங்க வேண்டும். எத்தனை பெண்கள் வேலைத்தலங்களிற்கு போய்விட்டு வந்து அந்த அலுப்பு தீரு முன்பே வீட்டு வேலைகளையும் செய்கின்றார்கள். அப்படியாயின் பெண்கள் என்ன வேலை செய்யும் இயந்திரங்களா? அவர்கள் இயந்திரமானால், இயந்திரங்களை யார் வாங்குவது? உங்கள் வீட்டு இயந்திரம் ஒன்றை கடைக்காரனா அதற்கான பெறுமதிக் காசையும் இயந்திரத்தையும் தருகின்றான்? சற்றேனும் சிந்தித்து பாருங்கள். ஏன் அதற்கொரு நியதி பெண்ணிற்கொரு நியதி. அப்படியாயின், ஆண்களா வேலைகளை செய்யவேண்டும் என்ற கேள்வி மனதில் தோன்றுகின்றதல்லவா? அதற்கான விடை ஆண்களும் பெண்களுடன் சேர்ந்து ஒரு சில வேலைகளில் பங்கேற்கலாமில்லையா?

புதிய தம்பதிகளுக்கு வீடு பொருள் தேவைதான். ஆனால் அவற்றை பெண் வீடு தான் கொடுக்க வேண்டுமா என்ன? பெண் மட்டும் தானா அந்த வீட்டில் வாழ்கிறாள், பொருட்களை அனுபவிக்கின்றாள்? அது புதிய தம்பதியர் இருவருக்கும் தேவைதானே. அதை பெண்வீட்டில் இருந்து எதிர்பார்ப்பது நியாயமானதா? சில ஆண்கள் காதல் வசனம் பேசிவிட்டு, கல்யாணம் என்ற நிலைமை வரும் போது, பெண் வீட்டாரிடம் பல இலட்சங்களை வீசி அவர்களை இக்கட்டிற்குள்ளாகிறார்கள். பெற்றோரும் தம் பெண்ணிற்கு அவப்பெயர் என்றும், இன்னொருவன் ஏற்கமாட்டானென்றும், அதற்கும் மேலாக தமது மகளின் சந்தோஷமே தமது சந்தோஷமென்றும் நினைத்து, கடன்பட்டும், காணிபூமியை விற்றும் கொடுக்கிறார்கள். காதலிக்கும் போதுள்ள துணிவு கல்யாணம் என்றதும் ஏன் பணத்தை எதிர்பார்க்கிறது? அதற்காக எல்லா ஆண்களும் அப்படி என்பதும் அல்ல.

ஆண்களை பெற்ற தாய்மார் சிலர் தாங்களே இலட்சங்களை உயர்த்துவதில் முன்னிற்கிறார்கள். அவர்களும் அன்று சீதன பேய்க்கு முகம் கொடுத்தவர்கள்தானே. இன்று ஏன் அதை உணர்கிறார்களில்லை? இன்றைய பெண்ணானவள் நாளை தாய், மாமி, மருமகள் போன்ற பட்டங்களை பெறத்தான் போகின்றாள். பட்டங்கள் மாற மாற குணங்களும் மாறுகின்றனவோ? மணப்பெண்ணாக இருக்கும் போது அவளது பெற்றோர் எப்படி கஷ்ரப்பட்டு சீதனம் கொடுத்தார்கள் என்பதும், ஒரு மாமியாரின் கீழ் மருமகளாக அதன் பலாபலன்களையும் அனுபவித்தது பற்றி அவளிற்கு தான் தெரியும். அப்படி ஒரு நிலையிலிருந்து வந்த பெண் தனக்கு வரும் மருமகளை பழிவாங்க நினைப்பது நியாயமா? இதில் நாம் யாரை குற்றம் கூறுவது? இந்த சீதனக் கொடுமை பெண்களை பெற்றவர்களையும், பெண்களை சகோதரர்களாக அடைந்தவர்களையும் சித்திரவதை செய்கின்றதென்பது இன்று எம் கண்முன்னே அசுர தாண்டவமாடுகிறது. எத்தனை சகோதரர்கள் தங்கள் சகோதரிகளை ஒருவன் கையில் ஒப்படைப்பதற்காக, சொந்த பந்தங்களையும், சுகதுக்கங்களையும், பட்டம் படிப்புகளையும் துறந்து, கொதிக்கும் வெய்யிலிலும், உறையவைக்கும் பனியிலும் அந்நிய நாடுகளில் தாம் ஐக்கியமாகின்றார்கள். இவர்கள் பெண்சகோதரர்களுடன் பிறந்தது குற்றமா? அதேவேளை சிலர் தாங்கள் கஷ்ரப்பட்டதை சிந்திக்காது, பெற்றவர்களும் உணராது பல இலட்சங்களுக்கு விலை போகிறார்களே. இது தான் வருந்தக் கூடியதாகும். அனுபவித்தவர்களுக்கு கூட அதன் கஷ்ரம் விளங்காவிட்டால், வேறு யாருக்கு தான் அதன் பலாபலன்கள் புரியும்?

வீட்டிற்கு வந்த மருமகளை தன் குலம் விளங்க வந்தவளாகவும், விளக்கேற்ற வந்தவளாகவும் எண்ணாது சில மாமியார் சீதனம் காணாது என்று துன்புறுத்தி இறுதியில் அவளை தற்கொலை செய்யுமளவிற்கு கொடுமைப்படுத்துகிறார்கள். தாங்கள் வாங்கிய பொருளிற்கு பெறுமதி அதிகமென்று வியாபாரி

www.tamilarangam.net



விற்று பல நாட்களின் பின் கேட்டால் கொடுப்பார்களா? தன் பெண்ணிற்கு இந்நிலை ஏற்பட்டால் எப்படி அரற்றுகிறார்கள். அதே நிலை இன்னொரு பெண்ணிற்கு ஏற்படும் போது ஏன் சட்டைசெய்கிறார்களில்லை? ஏன் அவர்கள் மருமகளை மகளாக, ஏன் ஒரு பெண் என்ற கோணத்தில் பார்க்கிறார்களில்லை? அப்படி பொது நோக்கில் நோக்கினால், பெண்களிற்கு பல பிரச்சனைகளிலிருந்து தீர்வுகிடைக்குமல்லவா?

படித்த பெண்களென்று பெருமையாக பேசிக்கொள்கிறோம். அப்படிப்பட்ட பெண்களால் ஏன் இன்னும் சீதனத்தை ஒழிக்க முடியவில்லை? படித்த பெண்களால் தங்களைத தாங்களே காப்பாற்றமுடியும். யாரையும் சார்ந்திருக்க தேவையில்லை. அப்படிப்பட்ட பெண்களை சீதனம் கொடுத்து திருமணம் செய்யமாட்டோம் என்று திடசங்கற்பம் பூண்டால் யாரால் என்ன செய்யமுடியும்? ஏன் இன்றும் பெண்கள் இதை உணர்கிறார்கள் இல்லை. மயிலை இறகு போடு என்றால் போடுமா என்ன? சும்மா சீதனக்கொடுமை, மாமியார் கொடுமை என்று வீணே பேசுவதால் பயனென்ன? இக் கொடுமைகளை எமது சமுதாயத்திலிருந்து எவ்வாறு களையலாம்? அதற்கு என்ன வழிமுறைகள் கையாளப்பட வேண்டுமென்று சிந்தித்து செயற்படுத்த வேண்டும். ஏன் இன்னும் யாரும் செயற்படுத்த முன்வரவில்லை? சமுதாயத்தில் இன்னும் பெண்களுக்கு "வாய்க்காரி", "திமிர்காரி", "அடங்காப்பிடாரி" போன்ற பட்டங்கள் சுட்டுவதற்காக காத்திருக்கின்றன. அப்படி மீறிவரும் ஒரு சில பெண்களுக்கும் நாளடைவில் பெண்களின் ஆதரவு அடங்கிப் போகிறது.

இவ்வாறு பல ரூபத்தில் வடிவெடுக்கும் பிரச்சனை குழந்தை வடிவிலும் முன்னெடுக்கிறது. சிலருக்கு தலைப்பிள்ளை பெண்ணென்றால் பிரச்சனை, அதுவும் தொடர்ந்து பெண்ணென்றால் கேட்கவும் வேண்டுமா? ஒரு விலங்கியல் ஆசிரியர் தனது கூற்றில் பிறப்புரிமைக்கு வழிவகுக்கும் நிறமூர்த்தம் என்ற அமைப்பில் பெண்களுக்கு XX என்ற காரணிகளும் ஆண்களிற்கு XY என்ற காரணிகளும் இருப்பதால், பெண்களில் இல்லாத அந்த Y இற்கே நாம் இலட்சங்கள் கொடுப்பதாக, ஆனால் அந்த Y தான் பிறக்கும் பிள்ளை ஆணா, பெண்ணா என்பதையும் நிரணயிக்கிறது. அது அப்படியிருக்க பெண்பிள்ளை பிறந்தால் ஏன் பெண்களை வருந்துகிறார்கள்? பெண்ணென்றால் பேயும் இரங்குமென்று கூறுவார்கள். அதற்கிருக்கும் இரக்கம் கூட மனிதருக்கு ஏன் இல்லாமல் போனது? பெண்ணென்றால் மட்டமா என்ன? சக்தியின்றி சிவனில்லை என்பார்கள். எனவே பெண்ணின்றி ஆண் இல்லை. வள்ளுவர் கூட "மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன் நன்கலம் நன்மக்கள் பேறு" என்று தானே சொன்னார். ஆண் மக்கள் என்றா சொன்னார்.



15ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜேர்மனியில் சாதரணமாக எங்கள் சனங்கள் கூடும் சந்தர்ப்பங்கள் பலவுண்டு. நான் விரும்பாமல் ஆனால் தவிர்க்க முடியாமல் இழுபடும் சில சந்தர்ப்பங்கள் இந்தக் கலியாணங்களும் பிறந்தநாள் கொண்டாட்டங்களும்தான். அப்படியான ஒரு கலியாண வீடுதான் அது. அய்யர், மேளம்... அப்படியே யாழ்ப்பாணத்தைப் பெயர்த்துக் கொண்டுவந்த கலியாணம்...... சம்பந்தப்பட்டவர்கள் தலைப்பாகைகளைக் கட்டிக்கொண்டு அங்மிங்குமாக ஒடி அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தனர். தூர இருந்து நடைமுறைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

கன்னிகாதானம்....!

உருத்துள்ள இரு குடும்பத்தினர் மணமக்களின் இருபுறங்களிலும் நின்று அய்யரின் கட்டளைகளை நிறைவேற்ற ஆரம்பித்தனர். ஒரு புறத்தில் சற்று வயதுபோன தம்பதிகள். அவர்கள் அவ்வளவாக எனது கவனத்தை ஈர்க்கவில்லை. மறுபுறத்தில் இளம் தம்பதிகள். அவர்களில் மினுங்கிய பட்டும் பவுனும் கவனத்தை ஈர்ந்தன. தடித்த உயர்ந்த இளைஞன். சிங்கப்பூர் பட்டுவேட்டி சட்டைகள். சட்டைக்கு மேல் பட்டை பட்டையாக சங்கிலிகள்! கையில் எத்தனையோ மோதிரங்கள், சங்கிலிகள்...!

சிறு வயது ஞாபகம் ஒன்று. சிரித்துக் கொண்டேன்.

எங்களூரில் "பிலாக்காய்ச் சபாபதியார்" என்று ஒருவர் இருந்தார். அவருடைய வீட்டு வாசலில் பலாமரங்கள் நின்றபடியால் தான் அந்தப் பெயரோ தெரியவில்லை. அவருக்கு நீரழிவு நோய் வந்ததால் எந்த நாளும் ஊசி போடுவதற்கு எங்கள் தெருவால் திருக்கல் மாட்டு வண்டிலில் ஆஸ்பத்திரிக்குப் போவார். அவரின் வண்டிலை வேடிக்கை பார்ப்பது எனது வழக்கம். அவருடைய வடக்கன் மாடு, வெண்டயம் சங்கிலி, மணிகள், எத்தனையோ சோடனைகளுடன் "சல்,சல்" என்று சத்தம் போட்டுக் கொண்டு போகும்....

சபாபதியாரின் வடக்கன் மாடு வெள்ளை. இந்த இளைஞன் அப்படியில்லை...



www.tamilarangam.net

அவனுக்குப் பக்கத்தில் மனைவி நின்று கொண்டிருந்தாள். கல்யாண அலங்காரங்கள் குறைவில்லாமல் இருந்தன. எல்லாம் வழக்கம் போலத்தான்... என்று நினைத்து நான் திரும்பியபோது.....தீடீரென்று அவள் நான் இருந்த பக்கம் திரும்பினாள்...

..........?

ஆம். அவளேதான். சந்தேகமே இல்லை!

*   *   *

பிற்பகல் மூன்று மணியிருக்கும். வெளியில் ஆனி மாத வெயில் அனலாகக் காய்ந்தாலும், என்னுடைய அறையின் தெற்குப்புற ஜன்னல் வழியாக வந்த காற்று அறையை "எயர் கண்டிஷன்" செய்து கொண்டிருந்தது. மாதாந்த அறிக்கை ஒன்றை தட்டச்சுயந்திரத்தில் போட்டுக் குத்திக் கொண்டிருந்தேன்.

"....சட்டவிரோதமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் சம்பந்தமாக தொழில் கந்தோரில் செய்யப்பட்ட முறையீடு...."

என்னுடைய அறையை நோக்கி யாரோ நடைபாதையால் வருவது யன்னல் வழியாகத் தெரிந்தது. மூன்று பெண்களும் இரண்டு ஆண்களுமாக ஐந்து பேர் வந்து கொண்டிருந்தனர். வழக்கமாக பலர் வருவார்கள், போவார்கள். ஆனால் அன்று வந்தவர்கள் அறிமுகமில்லாதவர்கள்.

தட்டச்சு யந்திரத்தை ஒதுக்கி வைத்துவிட்டு புதியவர்களை வரவேற்க ஆயுத்தமானேன்.

வந்தவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். நகரத்திலுள்ள கூட்டுறவு மின்தறிநிலையத்தில் வேலைசெய்பவர்கள். பெண்கள் மின்தறிகளில் வேலை செய்பவர்கள். ஆண்கள் யந்திரம் ஓடுவதற்கு துணைபுரிபவர்கள். பிட்டர், மெக்கானிக் என்று சொன்னார்கள். மின்தறி நிலையங்களில் எழுதப்படாமலே இருந்த பால்ரீதியான தொழில்பிரிவு அது. எந்த மின்தறி நிலையத்திலும் நான் பெண் பிட்டர்களையும் மெக்கானிக்குகளையும் காணவில்லை. எல்லாப் பெண்களும் தறியில் வேலை செய்பவர்கள்தான்.

அவர்களுடைய பிரச்சனை; வேலைநேரக்குறைப்பு, வேலை நீக்க மிரட்டல், தொடர்பாக இருந்தது. அவர்கள் கொடுத்த தரவுகளைக் குறித்துக் கொண்டேன்.

எழுபதுகளின் பிற்பகுதியில் நாட்டின் தொழிலகங்களில் பொதுவாக ஆரம்பித்துக் கொண்டிருந்த பிரச்சனைதான். கூட்டரசாங்க காலத்தில் ஏற்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்தன. நகரப்பகுதிகள் எங்கும் மின்தறிநிலையங்கள் நெருப்புப்பெட்டித் தொழிற்சாலைகள்.... இன்னும் பல உருவாகின. வீடுகளில் ஒதுங்கியிருந்த இளம் பெண்களும் ஆண்களும் இவற்றில் தொழிலாளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களின் உற்பத்திகளுக்கும் மக்கள் மத்தியில் நல்ல கிராக்கி இருந்தது. இந்த புறநிகழ்வுகள் இளம் உள்ளங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள்தான் சிறப்பானவை. யாழ்ப்பாண வேலிகளுக்குப் பின்னால் நின்று வெளியுலகை எட்டிப் பார்த்த பெண்கள் இந்த தொழிற்சாலைகளுக்குள் வந்த பொழுது அவர்களில் ஏற்பட்ட மாற்றங்கள்......!!

"... நாங்கள் வேலை செய்யிறது 'ஓட்டமற்றிக் லூம்கள்'. சில காலங்களில் ஒரு ஆளே இரண்டு லூம்களையும் பார்க்கவேணுமென்டு சொல்லியிருந்தவை. அந்தளவுக்கு துணியளுக்கு மாக்கற் இருந்தது. ..."

எனக்கு எதிரில் இருந்த பெண் தங்கள் தொழில் நிலையத்தைப்பற்றி விபரித்துக் கொண்டிருந்தாள். மற்றப் பெண்கள் அவ்வப்போது தங்கள் கருத்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்கள். பின்னாலிருந்த மெக்கானிக்குகள் தலைகளை ஆட்டிக் கொண்டார்கள்.

தாங்கள் நாளொன்றுக்கு உற்பத்தி செய்யும் துணி மீட்டரில் எவ்வளவு நீளம். தங்களுக்குக் கிடைக்கும் கூலி. தரவுகள் வந்து கொண்டிருந்தன.

" இப்ப துணியளை விற்கேலாது. இம்போட்டட் துணியெல்லாம் மாக்கட்டுக்கு வந்திருக்கு எண்டு டிரக்டர்மார் சொல்லுகினம். உதை நம்பேலாது. பிரைவேட் லூம்கள் எல்லாம் மூண்டு ஷிப்ட் ஓடுதுகள். எங்கடை துணியைத்தான் விற்க்கேலாது எண்டு சொல்லுகினம்.... மேலுக்கு எங்கேயோ ஊளல் இருக்கு...."

www.tamilarangam.net

உங்களின்ர பெயர் என்ன?

"கல்யாணி"

"இவ்வளவு விஷயங்கள் எல்லாம் சொல்லுறீங்கள். என்ன படிச்சனீங்கள்?

இவ்வளவு நேரமும் முச்சுவிடாமல் பேசிக் கொண்டிருந்தவள் முகத்தில் கவலையும் வெட்கமும் தோன்றி மறைந்தன.

"அப்பா செத்துப்போனதாலே இடையிலை பள்ளிக்கூடத்தை விட்டுட்டன். பிறகு இந்த வேலை கிடைச்சுது..."

படிச்ச பெண்களால்தான் புள்ளி விபரங்களையும் தரவுகளையும் தரமுடியும் என்ற குட்டிமுதலாளித்துவச் சிந்தனை எப்படியோ வந்து விடுகிறது. வெட்கப்பட்டுக் கொண்டேன்.

" இப்ப ஷிப்டுகளை நிப்பாட்ட வேண்டும். ஆக்களை வேலையிலை இருந்து நிப்பாட்ட வேண்டும்... எண்ட வெருட்டல்கள் எல்லாம் ஆரம்பிச்சிருக்கு... எங்களுக்கெண்டு ஒரு சரியான சங்கம் இல்லை...எங்கடை குறையளை மனேஜருக்குச் சொல்லித் தீர்க்கவும் ஏலாது இப்ப...." மேலும் பேச அவள் தயங்கினாள்.

"சொல்லுங்கோ..."

"கூட்டுறவுச்சங்கத் தலைவரும் எம்பியின்ரை சொந்தக்காறர்...."

"இது துரோகியின்ரை காலத்திலை ஆரம்பிச்சலூம். நாங்கள் அவற்றை காலத்திலை வேலைக்கு வந்தனாங்கள்.. ஆனபடியாலை எப்படி என்டாலும் போகட்டும் எண்டும் இருக்கினம்.." மெக்கானிக் இடைமறித்துச் சொன்னார்.

"இதுகள் எல்லாம் உங்களை ஒண்டும் செய்யாது. லூமிலை உங்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதுதான் கோரிக்கையாக இருக்க வேணும். அதற்காக நீங்கள் ஒற்றுமையாகப் போராடத் தயாராக இருந்தால், உங்களாலை இதிலை வெல்ல முடியும். அதுக்கு நீங்கள் தயாராக இருக்க வேணும்"

"எல்லாரும் இதுக்கு தயாராக இருக்கிறம்...."

அடுத்து வந்த வாரங்கள் சங்க அமைப்பு வேலைகளிலேயே சென்றன. சந்தித்துப் பேசுதல்...சிறு கூட்டங்கள்....

தாமுண்டு, தமது வேலையுண்டு என இருக்கும் பெண்களும் ஆண்களும். மனேஜருக்குப் பயந்து அல்லது நெருக்கமாக இருக்கும் தொழிலாளர்கள். இவர்களுடன் பேசுவது..அமைப்பாக்குவது. கல்யாணி தனது வேலை நேரம் ஒய்வு நேரம் என்று பாராது சுறுசுறுப்பாக இதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். நாம் சந்தித்த வேளைகளில் எத்தனை பேர் சங்கத்தில் சேர சம்மதித்து விட்டனர், எத்தனை பேர் நிர்வாகத்திற்குப் பயப்படுகின்றனர், எப்படி முதற் கூட்டத்தை நடத்தலாம் என்ற விடயங்களைப் பற்றிப் பேசினாள். முதற் கூட்டத்திலேயே கல்யாணி செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டாள்.

வழமையான நடவடிக்கைகள் தொடர்ந்தன...சங்கத்தின் தோற்றத்தால் நிர்வாகத்தின் சீற்றம்.... கோரிக்கைகள்..... சங்கத்தை அங்கிகரிக் மறுத்தல்.....

மறியல் போராட்டம்!

யாழ்ப்பாணக் பெரும்பான்மை குணாம்சங்களில் முக்கியமான தொன்று, தங்களைப் பகிரங்கமாக எந்த ஒரு இடதுசாரித்தனம் அல்லது தொழிற்சங்கத்தோடு இணைத்துக் கொள்ளாமை.

செய்யும் தொழிலே தெய்வம், ஏனென்றால் அதில்தான் சீதனத் தொகை தங்கியிருந்தது. அந்த தொழிலைச் சொல்லிச் சீதனத்தை வாங்கிவிட்டு, பின்பு தொழிற்சங்கம், வேலைநிறுத்தம் என்று சேர்ந்து அந்த வேலை போனால் சீதனம் கொடுத்தவர்கள் முகத்தில் எப்படி முளிப்பது?

ஆண்களின் கதியே இப்படி என்றால், அச்சம், மடம், நாணம் எல்லலாம் அடுப்படிக்குள் அடங்க வேண்டுமென்ற கோட்பாட்டுக்குள்ளாக்கப்படும் பெண்களின் நிலை?

மேல் தட்டுக்களிலிருந்து "வைற் கொலர்" வேலைக்குப் போகிறவர்கள் தங்களுடைய "டிப்பார்மென்டுகளுக்குள்" பதவி ஏணிப்படிகளில் ஏறமுயற்சித்துக் கொண்டிருப்பார்களேயன்றி தங்களைத் தொழிலாளர்களாகக் கருதுவதில்லை, மறுபுறத்தில் தனியார் கடைகளிலும் விற்பனை நிலையங்களிலும் வேலைக்குச் சேர்பவர்கள், வேலைபழகி தாங்களும் ஒரு நாள் "

www.tamilarangam.net

முதலாளி"களாக வேண்டுமென்ற எண்ணத்திலிருப்பார்களேயன்றி, தங்களைத் தொழிலாளர்களாக எண்ணுவதில்லை. ஆனால் இந்த தொழிற்சாலைகளில் வேலைக்குச் சேர்ந்தவர்களிடம் வேறுவிதமான் வளர்ச்சிகள் ஏற்பட்டிருந்தன. தாங்கள் கூலி உழைப்பாளிகள் என்ற உணர்வுகள் மேலிட்டிருந்தன.

ஷிப்ட் மாறும் நேரத்தில் மறியல் போராட்டம் ஆரம்பமாகியது.

தொழிற்சாலை வாசலில் வீதியோர நீட்டிற்கு தொழிலாளர்கள் சுலோக அட்டைகளை தாங்கி நின்றனர். ஆண்களும் பெரும் தொகையான பெண்களும் அப்படி நிற்பதை மக்கள் கேள்விக் குறிகளுடன் நாட்டம் விட்டுக் கொண்டு சென்றனர். சிலர் நின்று விசாரித்தனர்...ஆங்காங்கே உரையாடல்கள் நடந்தன. கல்யாணியும் தோழிகளும் போராட்டத்தைக் கச்சிதமாக நடத்திக் கொண்டிருந்தனர்... இணைந்த போராட்டங்களின் வளர்ச்சிப்படிகள்...

அவர்களின் போராட்டங்கள் வெற்றிப் படிகளை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன...

இந்த மாதிரியான நாளாந்த நடவடிக்கைகளின் போது தூண்டில் போட்டு தேர்நதெடுப்பவர்கள்தான் எங்கள் இலட்சியங்களோடு இணைக்கப்படுபவர்கள்...போராட்டம், பொலிஸ் கெடுபிடி...தொழிலாளிகள் யார்? முதலாளிகள் யார் ? அரசாங்கம் யாரோடு நிற்கும், பொலிஸ் யாருடை மண்டையை உடைக்கும் ! பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்காத பாடங்கள். இவைபற்றிச் சந்திக்கும் போது உரையாடல்கள். கல்யாணியும் மற்றவர்களும் கேள்விக்கணைகளைத் தொடுப்பார்கள். அவைக்கான பதில்கள். இடையிடையே புத்தகங்கள் பரிமாற்றம். புரியாத விடயங்கள்...விளக்கங்களும்..விவாதங்களும்... பூபாலசிங்கம் புத்தகசாலையில் நியுசெஞ்சரி புத்தகங்கள், வசந்தத்திலிருந்தும் சில. வார இறுதிக் கூட்டங்களில் கூலி உயர்வை விட சமூகமாற்றத்தைப்பற்றி அதிகம் விவாதிக்க ஆரம்பித்தோம்.

மேதின ஊர்வலம். சிவப்புப்பாவாடையணிந்த கல்யாணியும் தோழர்களும் தங்களுடைய பதாகையின் கீழ் சென்று கொண்டிருந்தனர். அதிகமான பெண்கள் அந்தப்பகுதியில் அணிதிரண்டிருந்தனர்.....

எங்கள் தினக்குறிப்புக்களில், எங்கள் அரசியல் வேலைகளுக்கு நாங்களே "பால் மார்க்" கொடுத்து பெருமிதம் அடைந்தோம்!

* *

வெவ்வேறு வேலைகள். பல நாட்களாக கொழும்பில் தங்கி விட்டு யாழ்ப்பாணம் திரும்பி வேலைகளில் ஈடுப்பட்டிருந்தேன். கல்யாணியும் இரு தோழிகளும் என்னைச் சந்திக்க வந்திருந்தனர். அவர்களின் முகங்களில் கவலை ரேகைகள் படர்ந்திருந்தன. ஒரு பெண் பேச்சை ஆரம்பித்தாள்.

"கல்யாணி சங்க வேலைகளிலிருந்து விலகப் போறாவாம்..."

நான் கல்யாணியைப் பார்த்தேன்.

"என்ன நடந்தது?"

"அம்மா எனக்கு கலியாணம் பேசுகிறா. அவர் எங்களுக்கு கிட்டிய சொந்தம். கொழும்பிலை ஒரு கடையிலை வேலைபார்த்தவர்....77 கலவரத்துக்குப்பிறகு இங்கை வந்திட்டார்.."

"அதுக்கென்ன ?"

"நான் மேதின ஊர்வலத்திலை போனதைக்கண்டிட்டு அம்மாவிடம் போய் கடுமையாகப் பேசியிருக்கிறார். தனக்குப் பெண்சாதியாக வரப் போறவள் இப்படியெல்லாம் தெருவிலை திரியக் கூடாது எண்டு சொல்லியிருக்கிறார். கலியாணம் எழுதிப் போட்டு தான் சவுதிக்குப் போக இருக்கிறார். என்னை வேலையை விடச் சொல்லியிருக்கிறார்...."

" அம்மா என்ன சொல்லுறா ?"

"அம்மா அழுது என்னை வேலைக்குப் போக வேண்டாமாம்....எண்டு சொல்லுறா.."

"நீங்கள் என்ன யோசிக்கிறீங்கள்?"

சிறிது நேர மௌனம்.

"எனக்கு இரண்டு தங்கச்சிமார் இருக்கினம். நான் உழைச்சுத்தான் எல்லாரும் பட்டினி

www.tamilarangam.net

கிடக்காமல் இருந்தனாங்கள். அம்மாக்கு அவசரங்களுக்கு உதவியது அவையின்ரை குடும்பம்தான். இப்ப அவை சொல்லுறதைத்தான் அம்மாவும் தங்கச்சிமாரும் கேட்பினம். நான் சொல்லுறதை ஒருத்தரும் கேட்க மாட்டினம்......அவர் கொழும்பிலேயே கடை வைக்க இருந்தவர்..இப்ப கலவரத்தாலைதான் சவுதிக்கு வெளிக்கிட்டிருக்கிறார்...அம்மா வேலைக்குப் போக வேண்டாமென்று அழுது கொண்டே இருக்கிறா..."

பல நாட்கள் கழித்து அவசரமாக வர்த்தக வங்கியிலிருந்து வெளியே வரும் பொழுது கல்யாணியைக் கண்டேன்.

"எங்கை இப்படி ?"

"சவுதியிலிருந்து காசு வந்திருக்கு, மாத்துறதுக்கு வந்தனான்."

* * *

கால ஓட்டத்தில் சுக்கான் உடைந்த ஓடங்களாக நாங்கள் எல்லோருமே சிதறி விட்டோம். அமைப்புகள், வளர்ப்புகள், தோழர்கள் எல்லாமே திசைக்கொன்றாய்....

தன்னுடைய சிறிய மகள் கேட்ட கேள்விக்கு திரும்பிப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள் கல்யாணி.

நான் அவளிடம் பேச முயற்சிக்கவில்லை.

"சவுதியிலை இருக்கைகே கலியாணம் முடிஞ்சுது...பிறகு இங்கை வந்து என்னைக் கூப்பிட்டவர்..." என்று ஒரு சுருக்க வரலாறு கிடைத்திருக்கும்.

எவருக்கும் பாறையில் விழும் விதைகளைப் பற்றிக் கவலையேற்படுவதில்லை...முள்ளுக்குள் விழுந்து முளைக்காமலே போகும் விதைகள் பற்றித்தான் கவலைகள்.....

யாழ்ப்பாண சுண்ணாம்புப்பாறையில் விழும் மட்டும் தான் வேரூன்றி வளருமோ?

10ம் பக்கத் தொடர்ச்சி

ஆண் என்றாலும், பெண் என்றாலும் நல்ல மக்களாக இருந்தால் அதைப் போன்ற சந்தோஷம் ஏது?

இன்றைய சமுதாயத்தில் சீதனங்கள் பல இலட்சங்களை தாண்டிவிட்டது. அதனால் எத்தனையோ பெண்கள் இன்னமும் வாழமுடியாத நிலை. ஏன் இந்த நிலை. சற்றேனும் சிந்தியுங்கள். இச் சீதனப் பேயால் பெண்கள் வாழாவெட்டியாகி பெண்ணினம் வலிவிழந்து போகிறது. பணமுள்ளோர் பணத்தை கொண்டு வாழ பணமற்றோர் பாழுங்கிணற்றிலே தத்தளிக்கின்றனர். ஏன் எமது மக்கள் இச்சகோதரிகளின் அவலநிலையைக் கண்டும் வாய் மூடி மௌனியாகிறார்கள்? எல்லாமே பணத்தின் கொடுமை தானோ?

எது எப்படியிருப்பினும் பெண்களின் இன்றைய நிலமைக்கு பெண்களே தான் பொறுப்பேற்க வேண்டும். பெண்கள் முழுமனத்துடன் நினைத்தாலன்றி இந்நிலை என்றைக்கும் மாறப் போவதில்லை. எனவே பெண்கள் இதைப் போக்க பாரியளவில் இல்லாவிட்டாலும் சிறிதளவிலாவது எதாவது செய்து அதை எங்கும் பரப்பி பாரியளவில் முழுமூச்சுடன் செயற்பட்டாலன்றி பெண்களின் அவலநிலை ஒவ்வொரு நூற்றாண்ளலும் தொடர்ந்தவண்ணமே இருக்கும். எனவே தொடர்ச்சியான எமது எழுத்திலோ பேச்சிலோ காலத்தை வீணாக்காது ஓர் தீர்க்கமான முடிவெடுத்து இன்றைய பெண்களின் துரதிஷ்ட நிலையை களைய முன்வரவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளிநாட்டவரே வெளியேறுங்கள்!

"வெளிநாட்டில இவங்கட கையாலே சாகிறதைவிட எங்கட சொந்த நாட்டில போய் சாகலாம்" என்ற விரக்தியை விழுங்கிய வார்த்தைகளே இன்று மேற்கு ஜேர்மனியில் வாழும் பெரும்பாலான வெளிநாட்டு அகதிகளின் மனங்களிலிருந்து வருகின்றன.

பிறந்த தேசத்தில் வாழும் சுதந்திரம் மறுக்கப்பட்டமையினாலும், நாளுக்குநாள் மனித இழப்புகள் மலிந்துவிட்ட தேசங்களிலிருந்து தப்பி மேற்கைரோப்பிய நாடுகளில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தஞ்சம் கோரிய அகதிகளின் 'பாதுகாப்பு' என்ற கனவு கலையத் தொடங்கியுள்ளது.

முற்றிலுமே அந்நியமான சூழலில், காலநிலை மாற்றங்களையும் சகித்துக்கொண்டு, தமது உயிருக்கான உத்தரவாதம் இந்த ஜனநாயகம் பேசும் நாடுகளில் நிரந்தரமாக கிடைத்துவிட்டதென்று வாழ்ந்த மக்களுக்கு, வீதிகளில் நடக்கும் போதும் தாம் தாக்கப்படலாமென்ற அச்சத்துடனான வாழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஜேர்மனியில் தஞ்சம் கோரியுள்ள அகதிகள் அந்நாட்டில் தற்போது கிளர்ந்துள்ள புதிய நாஸிகளினால் தாக்கப்பட்டும், அகதிமுகாம்கள் எரிக்கப்பட்டும், குண்டு வீச்சுக்குள்ளாக்கப்பட்டும் வருகின்றது.

"ஜேர்மானியர்களுக்கே ஜேர்மனி", "அந்நியனே வெளியேறு" எனும் கோஷங்களுக்கு கீழ் அனைத்து வெளிநாட்டவர்களும் எதிரியாகக் கணிக்கப்பட்டு அழித்தொழிப்பதே இவர்களது ஒரேயொரு தாரகமந்திரம்.

தினமும் ஏதோவொரு மூலையில் அந்நியர் என்ற ஒரே காரணத்திற்காக அகதிகள் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவர்களது மனிதநேயமற்ற தாக்குதல்கள், குழந்தைகள், வளர்ந்தவர்கள் என்ற பாராபட்சமின்றியே தொடர்கின்றது.


ஜனவரி 1991லிருந்து ஒக்டோபர் 9 வரையிலான காலஇடைவெளியில் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட 177 எரிப்புகள் நடாத்தப்பட்டுள்ளன. செப்டெம்பர் மாதத்தில் மட்டும் 200 தடவைக்கு மேல் அரசியல் தஞ்சம் கோரியுள்ளவர்களும், அவர்களது வதிவிடங்களும் தாக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய தாக்குதல்களுக்கு எதிராக பொலிஸார் காட்டும் சிரத்தை குறைவாகவேயுள்ளது.

பலநாட்டு அகதிகள் ஒன்றாக இணைந்து வாழும் அகதிமுகாம்கள் எந்தவித பிரத்தியோக பாதுகாப்பும் செய்யப்படாத நிலையில், பல அகதிமுகாம்களின் கதவுகள் ஏற்கனவே உடைக்கப்பட்டிருப்பதினால், எந்நேரமும் எவரும் வந்து தாக்கிச் செல்லக்கூடிய அபாயகரமான சூழலியே அவை அமைக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் கிழக்கு ஜேர்மனியிலுள்ள ஹோயேர்ஸ்வேர்டாவிலுள்ள 250 வெளிநாட்டவர்களைக்கொண்ட விடுதியொன்று புதிய நாஸிகளினால் 2 நாட்களாக தொடர்ந்து கற்களாலும், எரிகுண்டுகளாலும் தாக்ககப்பட்டபோது, அப்பகுதியிலுள்ள பொதுமக்களும் மௌனமாக இருந்ததன் மூலமாகவோ அல்லது வெளிப்படையாக இனவாதிகளின் குறிக்கோளான "ஹோயேர்ஸ்வேர்டாவிலுள்ள சகல வெளிநாட்டவர்களையும் வெளியேற்றி, அதனை வெளிநாட்டவர்களற்ற பிரதேசமாக்கவேண்டும்" என்பதற்கு ஆதரவு தெரிவிப்பதன் மூலமும் தங்கள் ஒத்துழைப்பை வழங்கினார்கள். இச்சம்பவத்தில் பொலிஸ் தலையிடவில்லை. இச்சம்பவம் தொடர்பாக அந்நகர மேயர் பேசுகையில் அப்பகுதியில் 9பொலிஸ்காரர்கள் மட்டுமே இருப்பதினால் அம்மக்களை தம்மால் பாதுகாக்க முடியாதென தெரிவித்துள்ளார். அத்தாக்குதலை நடாத்தியவர்களில் ஒருவர்

www.tamilarangam.net



தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், தமது நடவடிக்கைகள் தவறென தாம் ஒருபோதும் உணரவில்லையென்றும், கிழக்குஜேர்மனியில் ஒரு அகதியும் இல்லாதொழிக்கும்வரையும் தமது நடவடிக்கைகளை தொடரப்போவதாகவும் கூறியதுள்ளதோடு, அகதிகள் எந்தப்பகுதிக்குச் சென்றாலும் தாங்கள் அவர்களை நிம்மதியாகவிருக்கப் போவதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் பரவலாக இடம்பெறும் இனவாதத் தாக்குதல்கள், 1980 களில் உருவான பல நாஸிக்குழுக்களினாலேயே நடாத்தப்படுகின்றன. இவர்களால் இதுவரைகாலமும் ஆங்காங்கே சிறிய தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. கிழக்கு-மேற்கு ஜேர்மன் இணைவிற்குப்பின் ஜேர்மன் அரசியல் சூழலில் இடம்பெற்ற மாற்றங்களினால் தங்களுடைய நடவடிக்கைகளை தொடருவதற்கான தகுந்த சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளதாகக் கருதுகிறார்கள்.

சில காலமாகவே ஆளுங்கட்சியினராலும், எதிர்கட்சியினராலும் விவாதிக்கப்பட்டுவரும் ஜேர்மன் அரசியல் யாப்பிலிருந்து அரசியல் தஞ்சம் வழங்குதலுக்கான 16வது சாரத்தை அகற்றுதல் மற்றும் ஒன்றிணைந்த ஐரோப்பாவிற்குப் பின் வெளிநாட்டவர்கள் ஜேர்மனியில் உட்புகுவதை தடுப்பதற்காக எல்லைகள் முடப்படவேண்டுமென்ற முயற்சிகளும், "அரசியல் தஞ்சப்பிரச்சனையானது, ஜேர்மனிக்கு வாழ்க்கையைத் தீர்மானிக்கும் கேள்வியாகும்." ," வெளிநாட்டவரின் வருகையினால் எமது சமூகம் பல்லின கலாசாரங்களைக் கொண்டதாவதில்லாமல், பலவித குற்றவியலாக்கப்பட்டதாகவே உருவாகும். எமது ஜேர்மன் கலாசாரமானது ஒட்டுண்ணிகளாலும், திருடர்களாலும் அழிக்கப்படுகின்றது.", நாம் எம்மை வவுச்சர் அகதிகளிலிருந்து பாதுகாக்கவேண்டும்" போன்ற அரசியல்வாதிகளின் இனவாதத்தை வளர்க்கும் பேச்சுகளும் இவர்களின் இவ்வினவாத எழுச்சிக்கு தூபமிடும் காரணிகளாகின்றன.

ஐக்கிய ஜேர்மனிக்கு பின்பு, ஜேர்மன் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பொதுமக்கள் கூடிய வரி செலுத்தவேண்டிய நிலையேற்பட்டமையினால் மக்களிடமிருந்து உண்மையான காரணங்களை மறைத்து, இவையாவற்றிற்கும் காரணம் வெளிநாட்டவரும், அகதிகளுமே என அரசாங்கத்தினாலும், ஏனைய வலதுசாரி சக்திகளினாலும் திசைதிருப்பப்பட்டு பிரச்சாரம் செய்யப்படுவதால், மக்களின் கோபம் அப்பாவி அகதிகளின் மீது திரும்புகிறது.

தம்மை இனவாதத்தின் எதிரானவர்கள் எனும் கருதும் ஜேர்மன் தொழிலாளவர்க்கம், தொழிற்சங்கவாதிகளும், பெரும்பாலான மக்களும், தற்போது ஜேர்மனியில் 5 மில்லியன அகதிகள் உள்ளனர். எமது கப்பல் நிறைந்துவிட்டது,. ஆகவே எல்லைகளை மூடிவிட்டு, ஏற்கவே இங்கு வசிப்பவர்களை ஒன்றிணைக்கவேண்டுமென்றும், கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சியினர், ஜேர்மன் அரசியல் யாப்பிலிருந்து தஞ்சம் வழங்கும் சாரத்தை நீக்கி, தற்போது ஜேர்மனில் அமுலிலிருக்கும் ஜேர்மன் சட்டத்தை விடவும் கடுமையான ஐரோப்பிய ஆளுமையை உருவாக்க வேண்டுமென்றும், சமூகஜனநாயகவாதிகள் வெளிநாட்டவரை அரசியல் தஞ்சிகளாக அங்கிகரிக்கும் நடைமுறையை துரிதப்படுத்துவதற்காக நிர்வாக மட்டத்தில் இயங்க விரும்புகின்றதுடன், பசுமைக்கட்சியினர் ஏனைய கட்சிகளைப் போலவே அரசியல் தஞ்சம் கோருவோருக்கும், பொருளாதார அகதிகளுக்குமிடையிலான வித்தியாசத்தை திரும்பவும் கூறுவதோடு, அரசியல் அகதிகளுக்கு நிபந்தனையற்ற உரிமை

www.tamilarangam.net

வழங்கப்படவேண்டுமென்பதோடு, பொருளாதார அகதிகளுக்கு வரையறுக்கப்பட்ட உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெளிநாட்டவர் மீதான இத்தாக்குதல்களுக்கு அரச மட்டத்திலுள்ளவர்கள் காரணமாகமிருந்தாலும், இந்நடவடிக்கைகளின் வளர்ச்சிப் போக்கினால் தமக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை எண்ணி அச்சம் கொள்ளவும் செய்கிறார்கள்.

ஜேர்மனியில் கட்டிடத் தொழில், நகர சுத்திகரிப்பு, பாதையமைத்தல் போன்ற துறைகளில் அதிகமான வெளிநாட்டவர்களே கடமையாற்றுவதால், இத்தொடர்ச்சியான தாக்குதல்களில் வெளிநாட்டவர்கள் வெளியேறுவது முதலாளித்துவத்தினரால் விரும்பத்தக்க விடயமல்ல.

"நாம் எப்படி வாழ்வது வீடில்லாமல்? எமக்கு வீடு கட்டக்கூடிய மனிதர் தேவை", பாதையில்லாமல் நாம் எப்படி நடப்பது? " போன்ற வாசகங்களுடன் படங்களைக் கொண்ட சுவரொட்டிகள் வீடமைப்புத் தினைக்களத்தினராலும், சாலையமைப்புத் திணக்களத்தினராலும் ஒட்டப்பட்டிருந்தன. அத்துடன் " வெளிநாட்டவர் எதிர்ப்பு எம்மிடம் இல்லை" யென தொலைக்காட்சியிலும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

இத்தாக்குதல்கள் மேலும் உக்கிரமடைவதற்கான அறிகுறிகளே பெரும்பாலும் தென்படுவதால், இங்கு வசிக்கும் வெளிநாட்டவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவேயிருக்கின்றது. "இங்கு அப்படியொன்றும் நடக்காது." என எம்மை சமாதானப்படுத்தி எமது நிலையை மறுப்போமானால் ரோமாபுரி எரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னர்களாகிவிடுவோம்.

- வேணு



## சொர்க்கத்திலல்ல.

*அவர்கள் வசதி படைத்தவர்களாக இருந்தார்கள்*
*நான் வசதிகள் அற்றவனாக இருந்தேன்*
*அவர்கள் படித்தவர்களாக இருந்தார்கள்*
*நான் படிப்பறிவற்றவனாக இருந்தேன்*
*உழைப்பால் உயரலாம் என்றார்கள்*
*உழைப்புக்கான கூலியையே*
*என்னால் பெற முடியவில்லை*
*சில சமயங்களில்*
*உழைப்பதற்கே சந்தர்ப்பம் கிடைக்கவில்லை*
*இவையெல்லாம் ஏன்? எப்படி?*
*என்று கேட்டேன்*
*எல்லாம் எப்போ, எங்கோ*
*தீர்மானிக்கப்பட்டதாக சொன்னார்கள்*
*பின்புதான் உணர்ந்தேன்*
*தீர்மானிக்கப்பட்டது சொர்க்கத்திலல்ல,*
*அவர்களின் வர்க்கத்தினால்தான் என்று.*

முகிலன்

அட்டைப்பட ஒவியம் 1987 இல் சுட்டுக் கொல்லப்பட்ட பாலஸ்தீனக் கேலிச்சித்திர ஒவியர் நஜி அல் அலி வரைந்த படம். நன்றி: திசை.

www.tamilarangam.net

# துயர் நீங்க வழியுண்டோ

தமிழ்பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் நிகழும் இரத்தத்தால் மூடப்பட்ட அவலங்கள் தொடர்கதையாகவே இன்னும் தொடர்கின்றது.

எந்தவேளையும் தம்மை நெருங்கக்கூடிய மரணத்தை எதிர்பார்த்த வண்ணமே அங்கு மக்கள் வாழ்கிறார்கள்.

ஒருவேளை உணவுக்கே வழியின்றி தமது அத்தியாவசிய தேவைகளையே முழுமையாக பூர்த்தி செய்யமுடியாத நிலையில், பட்டினியோடும், அச்சம் நிறைந்த ஒவ்வொரு கணத்தையும் அகதிமுகாம்களிலோ, பதுங்குழிகளிலே கழிக்கவேண்டிய நிலமைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

காலத்துக்குக்காலம் ஏற்பட்ட யுத்தநிறுத்தங்களும், பேச்சுவார்த்தைகளும் அந்த மக்களின் வாழ்வை எந்தவித தீர்வுக்கும் இட்டுச்செல்லவில்லை.

அரசாங்கமும்சரி, புலிகளும் சரி தம்மை ஆயுதரீதியாக பலப்படுத்துவதற்காகவும், தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அவற்றைப் பாவித்தார்களேயன்றி அங்கு துன்புறும் மக்களை மையமாக வைத்து அவர்களது எந்தவொரு நடவடிக்கையும் அமையவில்லை.

தேசியவிடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலத்திலிருந்தே அதில் பங்கேற்றிய இயக்கங்களின் நடவடிக்கைகளிலிருந்து மக்கள் அன்னியப்பட்டேயிருந்தனர். சில இயக்கங்களின் நடவடிக்கைகளில் மக்களின் பங்களிப்பிருந்தாலும், அம்மக்களை முழுமையான அரசியல் தெளிவுக்குட்படுத்தி தமது போராட்டத்துடன் இணைத்துக்கொள்ள அவர்கள் முயற்சிக்கவில்லை.

இராணுவ தாக்குதல்களின்போது தாம் தப்பித்துக் கொள்வதற்கான கேடயங்களாகவும், தமக்கு மக்கள் தொடர்பு இருப்பதாக வெளியுலகிற்கு பிரச்சாரம் செய்வதற்காக வீடியோ கமிராக்களின் முன் நிறுத்துவதற்காகவுமே மக்களை உபயோகிக்கிறார்கள்.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதெனக் கூறப்படும் பிரதேசங்களில் துப்பாக்கியே எல்லாவற்றையும் நிர்ணயிக்கும் காரணியாக இருந்து வருகின்றது.

அடிப்படை மனித ஜனநாயகத்தை அம்மண்ணிலிருந்து அகற்றிவிட்டு தம்மை கதாநாயகர்களாக வெளிக்காட்டி, தாம் மக்களுக்காக போராடுகின்றோம் என்ற மாயைக்குள்ளேயே மக்களை வைத்திருப்பதிலேயே அவர்களின் கவனமிருக்கிறது.

தாம் மனதில் நினைக்கும் கருத்தை வெளியில் சொல்லும் சுதந்திரம் புலிகளினால் மக்களிடமிருந்து முழுமையாக பறிக்கப்பட்டுள்ளது. தாம் இன்று புலிகளை விமர்சித்தால் நாளை தாங்கள் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்படலாமென்பதால் தமது வாய்களை மூடிவைத்திருக்கவேண்டிய துரதிஷ்ட நிலையே அங்குள்ளது.

எப்போதும் போலவே பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டிருப்பவர்களே இரட்டிப்பான துயரை எதிர்நோக்குகின்றனர். புலிகள் கேட்கும் பணத்தைக் கொடுத்து வெளியேறக்கூடிய சூழ்நிலைமை அவர்களுக்கில்லை.

இத்தொடரும் இன்னல்களை தீர்ப்பதற்கான வழி தான் என்ன? இம்மக்களுக்குத் அவசியமான தீர்வை எப்படி பெறமுடியும்? யாரால் அந்தச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கலாமென்ற வினாக்கள் பரவலாக எழத்தான் செய்கின்றன.

* புலிகளிடம் எத்தகைய தவறுகள் இருப்பினும் அவர்களை இலங்கை அரசுடன் ஒப்பிடமுடியாது.

*புலிகளோடு ஒப்பிடும் போது பிரேமதாஸ ஜனநாயகவாதி.

இத்தகைய வாதங்களே எம்முன் எழுகின்றன.

இலங்கை அரசாங்கத்தையும், புலிகளையும் ஒப்பிடுவோமாயின், அரசாங்கமானது ஆளும் நிலையிலிருப்பதால் அதன் ஒடுக்குமுறையின்

www.tamilarangam.net

அளவு அதிகமாகமாகத்தானிருக்கும்.

ஈழவிடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் புலிகள்இயக்கம் ஒரு போராடும் குழுவாகத்தான் இருந்துவருகிறது. அதன் கடந்தகால நடவடிக்கைகளைப் பார்க்குமிடத்து இலங்கையரசின் நடவடிக்கைகளுக்கு எந்தவிதத்திலும் குறைந்ததாகத் தெரியவில்லை.

அடிப்படைக் கருத்துச்சுதந்திரம், எழுத்துச் சுதந்திரத்திற்கு இடமளிக்காத அதன் குணாம்சமாது, ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தனக்கு எதிரான கருத்துக் கொண்டவர்களையும், மாற்று இயக்கத்தினைச் சேர்ந்தவர்களையும் கொலை செய்துவந்திருக்கின்றது.

அன்மையில் தீப்பொறி அமைப்பைச் சேர்ந்தவர்களையும், பல்கலைக் கழகத்து மாணவர்களையும் கடத்தியோடு, அவர்களின் இந்தநிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லையென நன்கு தெரிகிறது.

இறுதியாக வெளிவந்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கைகளின்படி, புலிகள் தங்களுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டவர்களையும், தங்களுக்கு உதவி செய்ய மறுத்தவர்களையும் எவ்வளவு கொடூரமான முறையில் கைதிகளாக துணுக்காயிலுள்ள தடுப்புமுகாம்களில் தடுத்துவைத்திருக்கிறார்கள் என்பது தெரியவருகின்றது., அடைக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் வெண்ணிற சோக்கால் பிரத்தியோகமாக ஒவ்வொரு தனிப்பட்ட கைதிக்கும் அடையாளமிடப்பட்ட 3"*2" அளவான நிலப்பரப்பில், 9 அங்குல பார்தடிகள் கால்களில் இணைக்கப்பட்டு பலவந்தமாக அப்பகுதியிலேயிருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அதிகபட்ச குற்றவாளிகளாக கருதப்பட்டவர்கள் 8 அடி ஆழமுள்ள முள்ளுக்கம்பிகளால் சுற்றிவளைக்கப்பட்ட கிடங்குகளில் அடைத்து வைக்கப்படுகிறார்கள். துணுக்காயிலுள்ள கைதிகளும், இலங்கை இராணுவத்தினரால் சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு இழைக்கப்படுகின்றவற்றிற்கு ஒப்பான சித்திரவதைகளுக்கே உள்ளாக்கப்படுகிறார்கள்.

காலகாலமாக தமிழ்பேசும் பிரதேசங்களில் வாழ்ந்துவந்த முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி அப்பிரதேசங்களிலிருந்து வெளியேற்றியதே போதும் இவர்களின் அடிப்படையான இனவாத குணாம்சத்தை அறிவதற்கு.

காத்தான்குடி பள்ளிவாசல் கொலைகள், சிங்கள, முஸ்லிம் பொதுமக்களை அழித்தமை போன்ற இவர்களின் அழிவுகள் தொடருகின்றன.

போராடும் நிலையிலிருக்கும் போதே இத்தகைய ஜனநாயகமறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், ஆளும் அதிகாரத்தைப் பெற்றார்களானால் தற்போது நிலவும் இலங்கையரசின் ஆட்சிக்கு சமமானதாகவேயிருக்கும்.

இன்னொரு தரப்பினரால் முன்வைக்கப்படும் புலிகளைவிட இலங்கையரசிடம் ஜனநாயகமிருக்கின்றதென்பதற்கு, தமக்கு எதிரியாக கருதப்பட்ட எழுத்தாளர்கள், மனிதஉரிமைவாதிகள், தொழிற்சங்கவாதிகள் போன்றவர்கள் கடத்தப்பட்டு ஈனத்தனமாகக் கொலை செய்யப்பட்டதுடன், வடக்கு, கிழக்கு மக்களுக்கு எதிராக நடாத்தப்படும் யுத்தமும் இவ்வாதத்தைப் பொய்ப்பிக்கின்றன.

இரண்டு சக்திகளுமே வெவ்வேறு அதிகாரங்களின் சொரூபங்களாகவிருக்கும் சக்திகளை ஒன்றுடனொன்று ஒப்பிடுவது எந்தவித தீர்வையுமேற்படுத்தாது. மாறாக மக்களின் உண்மையான தேவைகளிலிருந்து பிரச்சனைக்கான தீர்வை அனுகவேண்டும்.

- சுப்பு

www.tamilarangam.net



# சிலுவை சுமப்பவர்கள்

- கீதா

பகல் வெயில் தகித்துக்கொண்டிருந்தது. கிணற்றைச் சுற்றி நாட்டப்பட்டிருந்த தென்னை மரங்களினூடாக உட்புகுந்த சூரியக்கதிர்கள், உடுப்புத் தோய்த்துக் கொண்டிருந்த லட்சுமியின் மேல் பட்டுக்கொண்டிருந்தன. அவளிலும் பார்க்க பெரிய ஆடைகள் ஒவ்வொன்றையும் வாளியிலிருந்து எடுத்து கல்லில் வைத்து சோப் போட்டுக் கொண்டிருந்தாள். பகல் மரக்கறி வெட்டும்போது கைகளில் ஏற்பட்டிருந்த வெட்டுக்காயங்களில் சோப் பட்டபோது அவை அவளுக்கு தாங்கமுடியாத எரிவை ஏற்படுத்தின.

"லட்சுமி.... இன்னும் தோய்ச்சு முடியேல்லையா...." புவனேஸ்வரி குசினியிலிருந்து குரல்கொடுத்தாள்.

"வாரேன்னம்மா.... இன்னும் கொஞ்சந்தான் இருக்குதம்மா...சுருக்கா வரேனம்மா...." அவள் தனது மெல்லிய குரலால் பதிலளித்தாள்.

லட்சுமி, வழமை போலவே வீட்டுவேலைக்காக மலையகத்திலிருந்து சுபாநாதன்-புவனேஸ்வரி தம்பதியினரின் வீட்டிற்கு வரவழைக்கப்பட்ட சிறுமி. அவளுக்கு எட்டு தொடக்கம் பத்து வயதாகவிருக்கலாம். இரண்டு பழைய சட்டைகளை இணைத்து தைக்கப்பட்ட ஒரு சட்டை அணிந்திருந்தாள். மூன்று ஊசிகளினால் பின்புற சட்டை மூடப்பட்டிருந்தது. அவளது தலைமயிர் கட்டையாக வெட்டப்பட்டு, எண்ணெயால் நனைக்கப்பட்டிருந்தது.

உடுப்புத் தோய்க்கும் கல்லிலிருந்து வடிந்த நீர் வெட்டப்பட்ட வாய்க்காலினூடாகச் சென்று தென்னை மரங்களுக்கு நன்மை செய்து கொண்டிருந்தது.

தோய்த்த ஆடைகளை உலற்றுவதற்காக லட்சுமி அவற்றை வீட்டுக்கோடிக்கு எடுத்துச் சென்றாள். கோடி முழுவதும் பற்றையாக, புல், செடி, கொடிகள் வளர்ந்திருந்தமையினால் அவள் ஜாக்கிரதையாக நடக்கவேண்டியிருந்தது. அத்துடன் குனிந்திருந்து உடுப்பு தோய்த்ததினால் உண்டாகிய இடுப்புவலி அவளை மெதுவாகவே நடக்க வைத்தது.

"லட்சுமி" புவனேஸ்வரியின் குரல் மீண்டும் ஒலித்தது.

இம்முறை லட்சுமி பதிலளிக்கவில்லை.

www.tamilarangam.net

உடுப்புத் தோயல் வேலைகளை முடித்துக்கொண்டு, பின்புறமாக குசினியை வந்தடைந்தாள்.
குசினிக்குள் சத்தம் கேட்டு அறைக்குள்ளிருந்து வெளிப்பட்ட புவனேஸ்வரி "மாடு... கொஞ்ச உடுப்புத் தோய்க்க உனக்கு இவ்வளவு நேரமா. உனக்கு சாப்பாடு போட்டு தந்திட்டு நான் கூட்டத்திற்கு போக நேரம் போயிட்டுதெண்டு பார்த்துக் கொண்டிருக்கிறன்."
லட்சுமி பதில் எதுவும் கூறாது, குனிந்து தனக்கென பிரத்தியோகமாக ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த கோப்பையை எடுக்கும் போது அவளது முதுகில் ஒரு அடி விழுந்தது.
அவள் தன்னை எதிர்பாரத அதிர்ச்சியிலிருந்து சுதாகரித்துக்கொள்ள முன்பு, அவசரமாக கொஞ்சம் சோற்றையும் கறியையும் போட்டுவிட்டு, "நான் இப்ப போறேன். பிள்ளை பள்ளிக்கூடத்தாலே வருவா. சாப்பாடு போட்டுக் குடு... இல்லையெண்டால் அது பாவம் சாப்பிட மாட்டுது... ஐயாவும் வருவார் தேத்தண்ணி ஊத்திக் குடு.... " தான் வருவதற்குள் அவள் செய்யவேண்டிய வேலைப்பட்டியலை முடித்துக்கொண்டு அவர் கூட்டத்திற்கு புறப்பட்டார்.
புவனேஸ்வரி அந்த நகரத்திலுள்ள சமையல் குறிப்பு, தையல், வீட்டுக்குறிப்புகள், இவற்றுடன் சாக்குக்காக இடைக்கிடை பெண்விடுதலையைப் பற்றி அலசும் அதிகமாக பெரிய இடத்துப் பெண்களைக் கொண்ட ஒரு மாதர்சங்கத்தின் தலைவி.
லட்சுமி குசினியின் ஒரு மூலையில் குந்தியிருந்து சாப்பிட்டபடி விக்கி..விக்கி.. அழுதுகொண்டிருந்தாள். இப்படியான யாருமற்ற நேரங்களில் தான் அவளுக்கு அழவும் சுதந்திரமிருந்தது.
அவளது தாய், தந்தையருக்கு ஒழுங்கான வருமானம் என்று ஒன்று வராதமையினால் அவளின் குடும்பத்தில் தலைகாட்டிய வறுமையினால் ஐந்து பிள்ளைகளின் மூத்தவளான இவள் வேலைக்கு போகவேண்டிய நிர்ப்பந்தம் இவள் தலையில் விழுந்தது.
இவள் இங்கு வேலைக்கு வந்த நாளிலிருந்து இந்த வீட்டிலிருக்கும், மற்றும் வந்து போகும் உறவினர்களாலும் அடி, உதை, வசைவு போன்றவற்றை தாராளமாக வாங்கிக் கொண்டிருக்கிறாள்.
தான் இங்கு வராமல் தாய் தந்தையருடன் இருந்திருந்தால் தான் இந்த நிலைக்கு ஆளாகியிருக்கமாட்டேன் என அவளது கள்ளமற்ற பிஞ்சு உள்ளத்தில் அடிக்கடி எண்ணம் வருவதுண்டு. சிலசமயங்களில் அவள் தன் மனதில் தனது பெற்றோரைக் கோபித்துக்கொள்வாள். பாவம்... அவளால் அதுமட்டும் தான் செய்யக்கூடியதாகவிருந்தது. தான் படும் துயரங்களை தனது சகோதரர்கள் படக்கூடதென்றும், அவர்களையாவது வீட்டில் வைத்திருக்கும்படி தனது பெற்றோருக்கு சொல்லவேண்டுமென்று அவள் நினைத்துக் கொள்வாள்.

*　*　*　*　*　*

வானத்தில் இரவாவதற்கான முன் ஆயத்தங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. பறவைகள் தங்கள் வெளி அலுவல்களிலிருந்து தம்மை துண்டித்துக்கொண்டு, தமது வீடுகளுக்கு திரும்பிக்கொண்டிருந்தன.
ல்ட்சுமி வீட்டைக் கூட்டி , குப்பையை அள்ளி வெளியில் கொட்டினாள். ஆறுமணிக்கு சாமிக்கு விளக்கேற்றுவதற்கு முன்பு அவள் வீட்டை கூட்டவேண்டும். அல்லாவிடின் அவளுக்கு தும்புத்தடியாலேயே அடிவிழும். சபாநாதனிடம் அவள் பலமுறை வாங்கியுமிருக்கிறாள்.
சபாநாதன் தேநீர் அருந்தியவண்ணம் சாய்மனைக்கதிரையில் சாய்ந்து அன்றைய பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார்.
சபாநாதன் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு அலுவலகத்தில் கணக்கியல்பிரிவில் லிகிதராக பணியாற்றுகிறார். அவருக்கும் புவனேஸ்வரிக்கும் இரண்டு பிள்ளைகள். மூத்தமகன் செந்தூரன் பத்தாம் வகுப்பிலும், மகள் சியாமளா ஏழாம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.
"ஏய்.. பிள்ளை ஐயா நிக்கிறாரோ..." மகேசனின் குரல் கேட்டு, பூக்கன்றுகளுக்கு நீருற்றிக்

www.tamilarangam.net

கொண்டிருந்த லட்சுமி திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தாள்.
"ஆமா...ஐயா ஊட்டுக்குள்ளே நிக்கிறாங்க..." லட்சுமி பதிலளித்தாள்.
மகேசனின் குரல்கேட்டு வாசலுக்கு வந்த சபாநாதன் "வாரும். என்ன இண்டைக்கு கொஞ்சம் நேரத்தோட வந்திட்டீர். இரும் நான் வெளிக்கிட்டு கொண்டு வாறன்... லட்சுமி இந்த ஐயாவுக்கு ஒரு தேத்தண்ணீ ஊத்திக் குடு.."
லட்சுமி தனது வேலையை முடித்துக் கொண்டு மகேசனுக்கு தேநீர் ஊற்றுவதற்காக சமையலறைக்குச் சென்றாள்.
மகேசன் மேசையிலிருந்த பத்திரிகையை எடுத்து வாசிக்கத் தொடங்கினார்.
மகேசன் சபாநாதனின் நண்பர். ஒவ்வொரு மாலையும் இவ்விருவரும், இவர்களின் வயதையொத்த இன்னும் சிலரும் கோயிலடியிலோ அல்லது நண்பர் வீட்டிலோ சந்தித்து ஊர்ப்புதினம், அரசியல் என கதைப்பது வழக்கம். நாட்டின் நிலமைகள் காரணமாக இவர்களின் சுதந்திரம் வரையறுக்கப்பட்டிருந்தாலும், பழக்கத்தை மாற்ற விரும்பாமையினால் நண்பர் வீட்டிலாவது சந்திப்பார்கள். அதே ஊரில் இருக்கும் ஒரு நண்பர் வீட்டிற்கு சபாநாதனை அழைத்துச் செல்வதற்காகத்தான் மகேசன் இப்போது வந்திருந்தார்.
"இந்தாங்க ஐயா தேத்தண்ணீ" லட்சுமி இரு கைகளினாலும் மகேசனுக்கு தேநீர் கோப்பையை நீட்டினாள்.
பத்திரிகையை மடித்து வைத்துவிட்டு, தேநீரை அருந்தியவண்ணம் வாசிக்ககூடியதாக ஏதாயினும் இருக்கின்றனவா என்று மேசைமீது நோட்டமிட்டுக் கொண்டிருந்த மகேசனின் கண்கள் விறாந்தையின் மூலையில் குந்தியிருந்த லட்சுமியைக் கண்டன. அவள் தனக்கு ஓய்வு கிடைக்கும் நேரங்கள் இப்படி மூலையில் குந்தியிருப்பது வழக்கம். இந்த ஓய்வு சில நிமிடங்களையே தாண்டுவதில்லை.
இத்தகைய வேளைகளில் மகேசன் தனது பொழுதை போக்குவதற்காக லட்சுமிக்கு கதை கொடுப்பதுண்டு.

இன்றும் வழமைபோல் அவளை சீண்டும் நோக்குடன் "ஏய்..லட்சுமி.. நீ இங்க இருக்காமல் இந்தியாவுக்கு போகலாமே.." எனக்கேட்டார்.
சிறிது நேரம் யோசித்த லட்சுமி "இந்தியாவுக்கு போயிட்டா சினிமா பார்க்க ஏலாதுண்ணு ஆத்தா சொல்லிச்சு" என்று கூறி மகேசனைப் அப்பாவித்தனமாகப் பார்த்தாள்.
மகேசன் அவளது அறியாமைக்காக அனுதாபப்பட்டார்.
"சரி வாரும் போவம்" சபாநாதனின் குரல் கேட்டு மகேசன் எழும்ப இருவரும் வெளியே கிளம்பினார்கள்.

* * * * * *

"அம்மா....அம்மா...ஊட்டுல யாரு..."
தனக்கு நன்கு பழக்கமான குரலைக்கேட்ட லட்சுமி எட்டிப் பார்ப்பதற்குள், அறைக்குள்ளிலிருந்து வெளிப்பட்ட புவனேஸ்வரி "ஆ...ராணி.... என்ன விசேஷம்" என்றார்.
"அக்கா... சாப்பாடு எதோ செய்ஞ்சு ஒங்களுக்கு கொடுக்கச்சொல்லி தந்தாங்க"
அவள் நீட்டிய பார்சலை வாங்கிக்கொண்டு "கொஞ்சம் பொறு. நான் தார சாமனைக் கொண்டு போய் அக்காவிட்டை குடு." என்று புவனேஸ்வரி அறைக்குள் சென்றாள்.
தனிமையில் நின்ற ராணியுடன் கதைக்கும் ஆவலுடன் விறாந்தைக்குச் சென்ற லட்சுமி, அறையிலிருந்து புவனேஸ்வரி வெளிப்படுவதைக் கண்டு மீண்டும் குசினிக்குள் சென்றாள்.
"இந்தா.. இதைக்கொண்டு போய் அக்காவிட்ட கொடு.."
" நான் போயிட்டு வரேங்கம்மா" ராணி விடைபெற்று சென்றாள்.
அதே வீதியில் வசிக்கும் லீலா, கனகரட்ணம் தம்பதியினர் வீட்டில் லட்சுமியைப் போலவே வேலைக்கு அமர்த்தப்பட்டவள் தான் இந்த ராணியும். சிறிய வயதிலிருந்தே அந்த வீட்டில் வேலை செய்வதினாலும், கனகரட்னத்தின் பிள்ளைகளின் காதல் கடிதங்களுக்கு தூதாக்காரியாக செயற்பட்டதினாலும் அவளுக்கு சில வரையறுக்கப்பட்ட சலுகைகள் அவ்வீட்டில்

www.tamilarangam.net

கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால் 'வேலைக்காரி' என்ற நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

லட்சுமியும், ராணியும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ராணியை அறிமுகப்படுத்திய அதே பெரியசாமி தரகர் மூலமாகத்தான் லட்சுமியும் இங்கு கொண்டுவரப்பட்டாள். ராணி பல காலமாக தங்கள் வீட்டில் வேலை செய்வதினால், பெரியசாமியைப் பிடித்தால் விசுவாசமான வேலைக்காரிகளைப் பெறலாமென லீலாவினால் தான் பெரியசாமி சபாநாதன் குடும்பத்தினருக்கு சிபாரிசு செய்யப்பட்டார். அந்த ஊரில் வேலைக்கு ஆளில்லாது 'அல்லல்படும்' பல குடும்பங்களுக்கு மலையகத்திலிருந்து சிறுமிகளை அழைத்து வந்து சேர்ப்பித்து பெரியசாமி நிறையவே புண்ணியம் சேர்த்திருந்தார்.

லட்சுமி மனம் விட்டு கதைக்கக்கூடியதாக ராணி மட்டுமே அருகாமையில் இருந்தாள். அவள் கடைக்கு போகும்போது வீதிகளில் சந்தித்தால் தான் ராணியுடன் கதைக்க சந்தர்ப்பம் கிடைக்கும். ராணி வீட்டுக்கு வரும் வேளைகளில் லட்சுமியை அவளுடன் கதைக்கவிடாது புவனேஸ்வரி கவனமாக தடுத்து விடுவார். லட்சுமி தான் படும் -துன்பங்களையும், தனக்கு விழும் அடிஉதைகளைப் பற்றியும் ராணிக்கு சொல்லுவாள். அவளது பிஞ்சு மனத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு, ராணியுடன் கதைப்பது சிறிதளவேனும் மருந்து போட்டது மாதிரி இருக்கும். ஆனால் மறுபடி வீட்டிற்குள் நுழைந்ததும் அக்காயங்கள் மீண்டும் புதுப்பிக்கப்படும்.

* * * * * *

வானமெல்லாம் இருள் பரவியிருந்தது. ஆங்காங்கு கோயில்களில் பூசைக்காக அடிக்கப்பட்ட மணிகளின் ஓசைகள் காற்றுடன் சேர்ந்து ஒலித்துக்கொண்டிருந்தன.

சபாநாதன் இன்னும் வீட்டிற்கு வரவில்லை. சியாமளாவும், செந்தூரனும் தமது படிப்பயைிலிருந்து தொலைக்காட்சி நாடகம் பார்ப்பதற்கு ஆயத்தமாக தமது வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டிருந்தார்கள். சபாலிங்கத்தின் உறவினரான மாலதியும், புவனேஸ்வரியும் குசினியிலிருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

தொலைக்காட்சி போடப்பட்டு, யாரும் பார்க்காத நிலையில் ஆங்கில நிகழ்ச்சியொன்று ஓடிக்கொண்டிருந்தது.

லட்சுமி இரவு சாப்பாட்டிற்கான தனது பங்களிப்பை முடித்துக்கொண்டு விறாந்தைக்குள் வந்தாள்.

தொலைக்காட்சியில் நடக்கும் நிகழ்ச்சிகளின் பெரும்பாலானவை அவளுக்கு விளங்காவிட்டாலும், தனது வாழ்வை சற்றேனும் மகிழ்விக்கும் ஒரு காரணியாக அவள் தொலைக்காட்சியை கணித்திருந்தாள்.

விறாந்தையில் ஒருவரும் இல்லாத, சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு காலியாக இருந்த கதிரையொன்றில் அமர்ந்தாள். அவளுக்கு அந்த வீட்டில் நிலத்தில் இருப்பதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தொலைக்காட்சி விளம்பரத்தில் வந்த குழந்தையைப் பார்த்தவுடன் அவளுக்கு தனது தங்கச்சியின் நினைவு வந்தது. தான் தங்கச்சியுடன் விளையாடிய நாட்கள் நினைவில் வர அவள் ஒரு கணம் தொலைக்காட்சியை மறந்து பழைய நினைவுகளில் அவள் தன்னை உலவவிட்டுக் கொண்டிருந்தாள்.

"இஞ்சபார் இந்த வேலைக்காரியின்ர ஆசையை"என்ற மாலதியின் குரலைக் கேட்டு எழும்புவதற்கு முன் அவள் கதிரையிலிருந்து நிலத்தில் தள்ளி விழுத்தப்பட்டாள்.

"உனக்கு எத்தனைதரம் சொன்னாலும் விளங்காதோ. இனிமேற்பட்டு இருந்துபார்"

புவனேஸ்வரியும் தனது பங்களிப்பிற்காக நிலத்தில் விழுந்திருந்தவளுக்கு காலினால் உதைத்தாள்.

"பாவம். அவள் கதிரையில் இருந்தால் உங்களுக்கு என்ன செய்யிது"

தனது படிப்பை இடைநிறுத்திவிட்டு செந்தூரன் லட்சுமிக்காக ஆஜரானான்.

"பேசாமல் போய் படி. நியாயம் கேட்க வந்திட்டார்" புவனேஸ்வரி அவன் மேல் பாய்ந்தார்.

www.tamilarangam.net

தான் என்ன சொன்னாலும் பிரயோசனமில்லை எனக் கண்ட செந்தூரன் மீண்டும் தனது அறையினுள் புகுந்து கதவைப் பூட்டிக்கொண்டான்.
லட்சுமி எழுந்த மீண்டும்குசினியிலுள்ள தனக்குரிய அந்த இருண்ட மூலையில் ஒதுங்கிக்கொண்டாள்.

* * * * * *

ஞாயிற்றுக்கிழமையின் பிற்பகல் துடிப்பில்லாமல் நகர்ந்து கொண்டிருந்தது.
அந்தப் பிரதேசம் முழுதும் ஒரு அமைதி நிலவிற்று.
லட்சுமி இரவுச்சாப்பாட்டிற்காக தேங்காய் துருவிக்கொண்டிருந்தாள்.
குசினிக்கதவு திறந்திருந்தமையினால் முற்றத்தில் நாயும், பூனையும் வியையாடிக்கொண்டிருந்தது தெரிந்தது.
அவளுக்கும் அவைகள் போல் விளையாட ஆசையாகவிருந்தது. ஆனால் அவள் இந்த வீட்டிற்கு வந்த நாளிலிருந்து அவளது ஆசைகளும், சுதநதிரமும் சுவீகரிக்கப்பட்டிருந்தன.
"லட்சுமி...லட்சுமி..."
சியாமளாவின் குரலுக்கு லட்சுமியிடமிருந்து எந்தவித பதிலும் வரவில்லை.
"லட்சுமி... என்ர சாப்பாத்துக்கு பைப்லே பூச சொன்னனான். பூசினியே.."
"இல்ல சின்னம்மா. இந்த தேங்காயே துருவிட்டு பூசித் தாறேங்க"
"எனக்கு கதை சொல்லாம இப்ப வந்து பூசு.... காயவும் வேணும்."
லட்சுமி தேங்காயை அப்படியே வைத்துவிட்டு , எழுந்து சியாமளாவின் சாப்பாத்துகளுக்கு வெள்ளைப்பூச்சு பூசச்சென்றாள்.
"அடிக்... அடிக் .. "
நிலத்தில் திறந்த நிலையிலிருந்த துருவிய தேங்காயை அவர்களின் வீட்டு நாய் ஜிம்மி ஆறுதலாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தது.
புவனேஸ்வரி எவ்வளவு கலைத்தும் அது அசையவில்லை.
"பொறு உனக்கு நான் தாறன்" என்றவாறு புவனேஸ்வரி ஒரு விறகுக்கட்டையை எடுப்பதற்காக குனிந்தாள்.
தனது எஜமானியின் அடுத்த நடவடிக்கையை உணர்ந்த ஜிம்மி அந்த இடத்திலிருந்து மறைந்தது.
"எங்க இந்த கழுதை... லட்சுமி.. லட்சுமி"
புவனேஸ்வரியின் குரலிலிருந்த கொதிப்பை இனங்கண்ட லட்சுமி "என்னம்மா கூப்பிட்டீங்களா.." என நடுங்கியவாறு கதவருகில் நின்றாள்.
"இங்க வா மாடு.... தேங்காய அப்படியே போட்டிட்டு எங்க ஆடப் போனனி"
"இல்ல...சின்னம்மாவுடே சாப்பாத்துக்கு பூச..."
லட்சுமி முடிப்பதற்குள்" அப்படியெண்டால் எடுத்து வைச்சிட்டு போகத் தெரியாதே...
என்றவாறு தனது கையிலிருந்த விறகுக்கட்டையை அவளது முகத்தில் எறிந்தாள்.
"ஐயோ... அம்மா" என்று கத்தியபடி முகத்தைப் பொத்தினாள். அவளது நெற்றியிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அவளது விசும்பல் மெல்ல மெல்ல அழுகையாக வெடித்தது. அந்தப் பிரதேசத்தை அவளது அழுகைச்சத்தம் அதிரச்செய்தது.
"அழுகையை நிப்பாட்டபீ போறியோ அல்லது திருப்பி ஒண்டு தரவோ"
லட்சுமி தனது உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு தொடர்ந்து தேங்காயைத் துருவத் தொடங்கினாள். ஆனால் அவளது நெற்றிக்காயம் தந்த வலியை அவளால் தாங்கமுடியவில்லை.
தனக்குள்ளேயே துடித்து தனது நிலைக்காக வருத்தப்படவே அவளால் முடிந்தது.
"சரி..சரி.. அழுதது காணும். போய் முகத்தை கழுவிட்டு வா" புவனேஸ்வரி கூற லட்சுமி எழுந்து கிணற்றடிக்குச் சென்றாள்.

* * * * * *

அன்றைய இரவு லட்சுமிக்கு நீளமானதாகவும், துயர் நிறைந்ததாகவுமே கழிந்து கொண்டிருந்தது. ஜன்னல் கம்பிகளினூடாக இருள் பரவியிருந்த வானத்தையும், அதில்

www.tamilarangam.net

மின்னிய நட்சத்திரங்களைப் பார்க்கவும் அவளுக்கு பிடிக்கவில்லை. மாறாக அவை அவளுக்கு அச்சத்தையே கொடுத்தது.
வெளியே காற்று வீசிக்கொண்டிருந்தது. காற்றில் மரக்கிளைகள் அசைந்தாடும் சத்தம் அவள் காதுகளுக்கு தெளி வாகக் கேட்டது.
அவளால் நிம்மதியாக தூங்கமுடியவில்லை.
அன்று நடந்த நிகழ்ச்சியும், அவள் நெற்றியில் ஏற்பட்ட காயத்தினால் உண்டாகிய வலியும் அவளைத் தூங்கவிடவில்லை.
இதுபோல் பலமுறை அவள் பலவித சடப்பொருட்களால் தாக்கப்பட்டிருக்கிறாள்.
சுருக்கமாகச் சொன்னால் அவள் அடி வேண்டாத நாளேயில்லை.
ஒருமுறை புவனேஸ்வரியின் நண்பியின் பணப்பேர்ஸ் காணமல் போய்விட்டது. அந்த நண்பியும் இந்த வீட்டில் தான் களவு போனதெனக்கூற, நிச்சயமாக லட்சுமி தான் எடுத்திருக்க வேண்டுமென்று புவனேஸ்வரி முடிவு செய்து, லட்சுமிக்கு செருப்பாலும், கையாலும் நன்றாக அடித்துவிட்டார். அத்துடன் ஒரு நாள் முழுவதும் சாப்பாடும் கொடுக்கவில்லை.
பின்பு அந்த பணப்பை வேறு எங்கோ பத்திரமாக இருந்து கிடைத்தது. அதற்காக வீணாக லட்சுமியை அடித்ததையிட்டு ஒருவருமே கவலைப்படவில்லை.
இனியும் இந்த அடிஉதைகளை வாங்கும் சக்தி அவளிடமிருந்ததாக அவள் நினைக்கவில்லை.
கண்ணை மூடி தூங்க முயற்சித்தாள்.
"எருமை.. மாடு.. கோப்பையை வடிவாப் பிடி..." என புவனேஸ்வரியும், "கக்கூசுக்கு போகத் தண்ணி கொண்டு வரச் சொன்னால் நடையே பயிலுறாய்" என்ற சுபாலிங்கத்தின் குரலும் அவள் காதுகளில் ஒலிக்க அவாளால் தூங்கமுடியவில்லை.
அவள் மனதிலுள்ள சோகத்தினால் பீறிட்டு வந்த விசும்பல்கள் வெளியேவராது தொண்டைக்குள்ளேயே நிறுத்தப்பட்டது.
அவளுக்கு சத்தம் போட்டு அழுவதற்கான சுதந்திரம் அந்த வீட்டில் இருக்கவில்லை.
ஆனால் உணர்வுகளை அடக்கிக்கொள்ளவும் அந்தச் சின்னப்பெண்ணுக்குத் தெரியாது.
அவளது கண்களால் வழிந்த கண்ணீர் அவளது தலையணையை நனைத்துக் கொண்டிருந்தது.
மறுநாள் எப்படியும் ராணியைச் சந்தித்து தனது தகப்பனுக்கு தன்னை வந்து கூட்டிக் கொண்டு போகச் சொல்ல வேண்டுமென்று நினைத்துக்கொண்டாள்.

*       *       *       *       *       *

மாதர்சங்கத்தின் அந்த மாதக்கூட்டம் புவனேஸ்வரி வீட்டிலேயே நடைபெறவிருந்தது.
அதிகமான உறுப்பினர்கள் வந்திருந்தாலும் இன்னும் சில உறுப்பினர்களின் வரவிற்காக கூட்டம் அரம்பமகாதிருந்தது.
லட்சுமி வெளிப்படியில் உட்கார்ந்திருந்து, அடுத்தநாள் தேவைக்காக அரிசியிலிருந்து நெல்லைப் பொறுக்கி கொண்டிருந்தாள். அவள் நிலத்தில் எறியும் நெல்லுக்காக பல கோழிகள் தங்கள் குஞ்சுகளுடன் ஆவலாக அவளைச் சூழ்ந்திருந்தன. அவை நெல்லுக்காக ஓடி வருவதையும்ம், பின்பு திரும்பிப் போவதையும் பார்ப்பது அவளுக்கு ஒருவித விளையாட்டாகவேயிருந்தது. அவளுடன் விளையாடவும் பறவைகளும், மிருகங்களும் மட்டுமேயிருந்தன.
விறாந்தையில் கூட்டத்திற்காக வந்திருந்தவர்களினது உரையாடல்கள் இவள் காதில் வந்து விழுந்தன.
"போனகிழமை எங்கட வேலைக்காரப்பெட்டை கலாவை குளிக்கச் சொல்லி அனுப்ப நாங்க பாவிக்கிற ஷம்புவையெல்லோ போட்டு முளுகிட்டாள்"
"நீர் உதைச் சொல்லுறீர். எங்கட பெட்டை என்ரை மகள்மார் போடுற மாதிரி சல்வார் உடுப்பு தனக்கும் தைச்சுத்தரச் சொல்லி எங்கட தையல்காரியைக் கேட்டாளாம்"
"உதுகளுக்கெல்லாம் கொழுப்பு... எல்லாம் நாங்க கொடுக்கிற சாப்பாடுதான். சரியெண்டால் உதுகளை பட்டினி போடவேணும்."
"உதுதான் சொல்லுறது தங்கத்தாலே செய்தாலும் அதுகள் வேலைக்காரிகள் தான் என்டு"
இவற்றை கேட்டபோது தான் மட்டுமல்ல தன்னைப் போலவே இன்னும் பல சகோதரிகள்

www.tamilarangam.net

தங்கள் குடும்ப நிலமைகளினால் வீட்டுவேலைக்காக வந்து துன்பத்தை அனுபவிக்கிறார்கள் என்ற உண்மை லட்சுமிக்கு புரிந்தது.

*          *          *          *          *          *

லட்சுமி கிணற்றடியில் பாத்திரங்கள் கழுவிக் கொண்டிருந்தாள்.
"லட்சுமி இங்க வா" என்ற புவனேஸ்வரியின் அழைப்பைக் கேட்டு வீட்டிற்குள் சென்றவள், அங்கு நின்றவரைப் பார்த்து ஆச்சரியத்துடன், சந்தோஷத்துடன் "இங்க.. அப்பு..." அவள் தன்னை மறந்து சொன்னாள்.
நான் என்ர புள்ளையை அழைச்சிட்டுப் போக வந்திருக்கேன்"
"ஏன் நாங்க சம்பளம் ஒழுங்காக அனுப்புறம் தானே... இப்படி இருந்தாப்போல வந்து கூட்டிக் கொண்டு போறதெண்டால்..." சபாநாதன் நியாயம் கேட்டார்.
"அவள் இங்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறாள். அங்க கூட்டி போய் என்ன செய்யப் போறீர்.."
"இல்லயய்யா... கொழும்பில வேற ஒரு வூட்டுல வேலைக்கு கேட்டவங்கய்யா... கொஞ்ச நாளுக்கு வூட்டுல வைச்சிருந்திருட்டு விடுவமெண்டு இதுவோட ஆத்தாளும் சொல்லிச்சு..."
லட்சுமியின் தந்தை ஜாக்கிரதையாக பதிலளித்தார்.
"லட்சுமி சுருக்கா வெளிக்கிடு புள்ள.."
புவனேஸ்வரியும், சபாலிங்கமும் சிலையாகியிருந்தார்கள்.
லட்சுமி தனது இரண்டொரு உடுப்புகளையும், வேறு சில பொருட்களையும் எடுத்துக்கொண்டுவந்தாள்.
சபாநாதன் இனி எந்தவிதத்திலும் தடுக்க இயலாமையினால் அந்த மாதத்தில் அவள் வேலை செய்த நாட்களுக்கான பணத்தை கணக்குப் பார்த்துக் கொடுத்து தனது பெருந்தன்மையைக் காட்டினார்.
லட்சுமி எல்லோரிடமும் விடைபெற்று தனக்கு தற்காலிகமாகவாவது சுதந்திரம் கிடைத்துவிட்டதென்ற சந்தோஷத்துடன் தந்தையுடன் புறப்பட்டாள்.
இருவரும் மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்த மணோன்மனி "இனி என்ன அப்பா செய்யிறது" என்று கேட்டாள்.
சபாநாதன் மௌனமாக எழுந்து சென்று, துயவுசெய்து வேலைசெய்யக் கூடிய இன்னொரு வேலைக்காரியை அழைத்துவரும்படி கேட்டு பெரியசாமிக்கு கடிதம் எழுதிக்கொண்டிருந்தார்.


## தேனீ

காலாண்டிதழ்

அசிரியர்குழு          தேனீக்கள்
தனிப்பிரதி          4    டீ.எம்
வருடசந்தா          20டீ.எம்

ஆக்கங்கள், சந்தா மற்றும் அனைத்துத் தொடர்புகட்கும்:

THENEE
C/O:SALZ,
WAIBLINGER STR.59,
7000 STUTTGART 1
GERMANY.

THENEE
SPARKONTO Nr:2300174892,
BLZ 600 501 01,
LANDESGIROKASSE,
7000 STUTTGART 1,
GERMANY.

www.tamilarangam.net



**War is only a matter of greed**

*Some are rich because some are poor*
*Life to some is sweet, but to some it's sour*
*But we are all people!*
*We have soil that many things grow*
*But, We have to eat what others throw!*
*Our Lands are used as dumping dens....*
*of rubbish what the rich produce,*
*and daily our wealth and power reduce....*
*There is fighting here.....*
*and fighting there.......*
*Endless fighting everywhere!*
*Fighting for soil!*
*Fighting for oil!*
*Fighting for race, colour and creed.*
*These wars are only a matter of greed!*
*Stop! This fighting.... I have to say......*
*I cannot bear! as I am a mother......*
*When one child tries to kill the other....*
*No one has the right to kill.....*
*a child brought forth with struggle and pain!*
*There is a woman's blood in every child.....*
*and every vain.....*
*So stop this fighting.... I have to say!*
*I cannot bear it any more!*
*as a mother and as awomen.....*
*Money for arms and uniforms.....*
*Being spent by lovers of dirty Wars.....*
*and loose their wealth and lives in vain!*
*When others make their fame and gain!*
*Our lands are used as testing grounds.....*
*of deadly bombs!*
*and turning the third world into tombs!*
*So stop this fighting..... I have to say*
*To restore Peace, there's another way!*
*That is to, "Think" and find a better way.*

Mallika

www.tamilarangam.net

# பேராசையினாலன்றோ யுத்தம்!

சிலர் செல்வந்தர்களாயிருக்கின்றனர்
சிலர் வறியவர்களாயிருப்பதால்.

எல்லோரும் மனிதர்களேயாயினும்

வாழ்வு
சிலருக்கு இனிக்கையில்
சிலருக்கு கசக்கிறது.

எங்களின் நிலங்களில்
உணவுப்பொருட்கள்
நிறைய விளைந்தும்
மற்றவர்கள் எறிவதையே நாங்கள் உண்ண
வேண்டும்

எங்களின் நாடுகள்
செல்வந்தர் தயாரிக்கும்
குப்பைகளின்
தொட்டிகளாயின.

அங்கும் இங்கும்
எங்கு நோக்கினும்
மோதல் மோதல்
முடிவில்லா மோதல்,

மண்ணிற்காகவும்
மணணெண்ணெய்க்காகவும்
மோதல் மோதல் மோதல்
இனத்தின், மதத்தின், நிறத்தின் பேரால்.....

இந்த யுத்தங்களனைத்தும்
பேராசையின் விளைவால்.

நிறுத்துங்களிந்த மோதலை
என்று நான் சொல்வேன்.

ஒரு தாயாக என்னால்,
ஒரு பிள்ளை மற்றையதைக்
கொலை செய்ய முயல்வதை
பொறுக்க முடிவதில்லை.

வலியோடு போராடி
பெற்றெடுத்து வளர்க்கும்
பிள்ளையைக்
கொல்வதற்கு யாருக்கும்
உரிமையில்லை.

ஒவ்வொரு பிள்ளையின்
நரம்பிலும் ஓடுவது
பெண்களின் இரத்தம்
எனவே, நான் சொல்கிறேன்
யுத்தங்களை நிறுத்துங்கள்

ஒரு தாயாகவும் பெண்ணாகவும்
இனியும் பொறுக்க முடியவில்லை என்னால்.

நியாயமற்ற போர்களின் தாசர்களினால்
ஆயுதங்களிற்கும்
சீருடைகளிற்கும்
செலவழிக்கப்படுகிறது பணம்.

மற்றவர் தம்மால்
பிரபலமாகி நன்மைகள் பெற
இவர்கள்
வாழ்வையும்
வளங்களையும்
வீணாய் இழப்பார்கள்

அவர்களின்
கொலைக்காரக் குண்டுகளின்
சோதனைக் களமாய்
எங்களின் நிலங்கள்.
கல்லறையாக மாறுகிறது
மூன்றாம் உலகம்

எனவே;
யுத்தங்களை நிறுத்துங்கள்
என்று நான் சொல்வேன்
அமைதியை அடைவதற்கு
வேறொரு விதியுண்டு
அது சிந்திப்பதால்
பெறுகின்ற நல்ல வழியொன்று.

www.tamilarangam.net

# க
# ண
# வ
# ன்

இந்த வீடு என்னுடையது.
நான் உன்னைத் தொட்டேன்.
முத்தமிட்டேன்.
முகர்ந்தேன்; அனுபவித்தேன்.
இதனாலேயே நான் உன்னை இங்கு வைத்திருக்கிறேன்.

இந்த வீட்டிற்குப் பளிங்குத்தரை உண்டு.
மேசை, நாற்காலிகள் போடப்பட்டுள்ளன.
மேலே கூரையும்,
பக்கத்தில் சுவர்களும்
அருகில் சமையல் அறை
அங்கே படுக்கை அறை.
நீ எனக்காகச் சமையல் செய்கிறாய்.
அதற்காக என்னிடமிருந்து
இரு வேளை உணவு பெறுகிறாய்.

இந்த வீட்டில் ஆரோக்கியமான குழந்தைகள் உள்ளனர்.
அவர்கள் என் இரத்தத்தின் வாரிசுகள்.
அவர்கள் என் சொத்தைப் பயன்படுத்துவார்கள்.

என் உயிரை அனுசரனையுடன்
வழியனுப்புவதின் மூலமாக
இந்த உலகில் இல்லாவிடினும்
மறுஉலகிற்கான உணவை எனக்குக் கொடுப்பார்கள்.

நீ என் குழந்தைகளின்
தாயாக இருக்கிறாய்.
இதனாலேயே என் மனைவி
எனும் பதவியை அனுபவிக்கிறாய்.
நான் இவர்களின் தந்தை எனும் நிலையை
மறுப்பேனெனில்
நீ தாய்மையை இழந்து விடுவாய்.
நீ எனக்கு சொந்தமானவள்-
முழுமையாகவும், உண்மையாகவும்.
உன்னுடையவை அனைத்தும் என் சொந்தம்.
ஏனெனில்
நான் உனது கணவன்.

**சிந்தி மூலம்:** பொபதி ஹிராண்டபானி
**தமிழில்:** இந்திரன்
**நன்றி:** காற்றுக்குத் திசை இல்லை.